விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 165 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (02.06.2023). தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## போதுமான எரிபொருள் கையிருப்பில் உண்டு

### அமைச்சர் கஞ்சன



(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகியவற்றில் எரிபொருள், போதுமானளவு கையிருப்பில் இருப்பதால் எரி பொருள் தட்டுப் 15

## எரிபொருள் இல்லை





(வவுனியா)

வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்ள வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை காணப்படுகின்றது.

அத்தோடு நகர மத்தியில் உள்ள இரண்டு எரிபொருள் 15

## மீண்டும் வரிசை



(யாழ்ப்பாணம்)

நாட்டில் மீண்டும் மக்கள் பெற்றோலிற்காக வரிசையில் காத்திருக்கும் 15

# பொருளாதார ரீதியில் ஸ்திரமடைய முடியும்

## நாட்டு மக்களுக்கான விசேட உரையில் ஜனாதிபதி



(கொழும்பு)

- பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருகின்றது.
- வாழ்க்கைச் செலவை குறைக்க நடவடிக்கை.
- ஏழைகளுக்கு நிவாரணம் வழங்கப்படும்.
- 2048இல் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே இலக்கு.

(02ஆம் பக்கம் பார்க்க)

## தையிட்டியில் போராட்டம் தொடர்கின்றது

(கொழும்பு)

தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து மூன்றாவது கட்டத்தின் இரண்டாம் நாள் போராட்டம் நேற்றும் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தில்தமிழ்தேசிய 15

## சிமெந்து விலை குறைகிறது?

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் சில நாட்களில் 50 கிலோ கிராம் எடைகொண்ட சிமெந்து மூடையின் விலை குறைக்கப்படலாம் என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

50 கிலோ கிராம் எடை கொண்ட 15

## ஆறு அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சதொசவில் குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் அமுலுக்கு வரும் வகையில் லங்கா சதொச நிறுவனம் ஆறு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை மீண்டும் குறைத்துள்ளது.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு 15

## 111 மருந்துகளுக்கு நாட்டில் தட்டுப்பாடு

### சுகாதார அமைச்சர் ஹெகலிய



(கொழும்பு)

இலங்கையில் தற்போது 111 மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த விடயத் 15

## தாண்டிக்குளத்தில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

தாண்டிக்குளம் பகுதியில் 58 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாண்டிக்குளம் - ஒயார் சின்னக் 15

## விருந்துபசாரத்தில் கைகலப்பு; நண்பனை கொன்றவருக்கு மரண தண்டனை

### வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

புதுமனை புகுவிழாவில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் சக நண்பனை படுகொலை செய்த முச்சக்கரவண்டி சாரதிக்கு மரண தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு தை மாதம் 28ஆம் திகதி வவுனியா, மருக்காரம்பளை பகுதியில் உள்ள 15

VILLAGE HOTEL Jaffna
யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL JAFFNA எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்

077 544 8503

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார...

விசேட உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு நெருக்கடியில் இருந்த போது, சரியான பொருளாதார கொள்கைகளும், மக்களின் கூட்டு முயற்சிகளும் சிறப்பாக அமைந்ததனால் பொருளாதாரம் படிப்படியாக நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரல் குறித்து சில குழுக்கள் தவறான தகவல்களை பரப்புகின்றனர்.

எனினும், பொருளாதார சீர்திருத்தங்களுக்கு அர்ப்பணிப்புடன் இருப்பதே முக்கியமானதாகும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளை கோடிட்டுக் காட்டிய ஜனாதிபதி, வாழ்க்கைச் செலவு குறைவதற்கும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், ஏழைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் வெளிப்படைத் தன்மையுடனான கலாசாரத்தை உருவாக்கவும் இந்த பொருளாதார மறுசீரமைப்புகள் வழிவகுக்கும் என குறிப்பிட்டார்.

கடுமையான நிதிக் கட்டுப்பாடு மற்றும் செலவு குறைப்பு நடவடிக்கைகள் காரணமாக, பணவீக்கம் குறைதல் மற்றும் பணபரிமாற்றம் அதிகரிப்பு உள்ளிட்ட சாதகமான முடிவுகளை அடைய முடிந்துள்ளதாகவும், அனைவரினதும் வாழ்க்கைச் சுமை குறைந்து, 70% வரை உயர்ந்திருந்த பணவீக்கம் இன்று 25.2% வரை குறைந்துள்ளதாகவும், அதன் பயனை தற்போது நாட்டு மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்.

2048இல் இலங்கையை அபிவிருந்தியடைந்த நாடாக மாற்றுவதே எனது இலக்காகும் என தேசிய நிலைமாற்றத்துக்கான திட்ட வரைபடத்தை நாட்டுக்கு முன்வைத்து ஜனாதிபதிரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.(ம)



பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

## உளமார வாழ்த்துகின்றோம்

பதினெட்டாம் ஆண்டு அகவை பூர்த்தியாகி
பத்தொன்பதாம் அகவையில் காலடி பதிக்கும்
யாழ். மின்சார நிலைய வீதி,

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**

(உரிமையாளர்– என்.நித்தியானந்தன்)
021 222 6953, 077 722 5310
அவர்களை சிறப்புற உளமாற
வாழ்த்துகின்றோம்.
இன்று போல் என்றும் எல்லோரும் போற்றிட,
நல்லோர் வாழ்த்திட, நல்லதே செய்து
நன்றே நிகழ்ந்திட, நல்வாழ்த்துக்கள்!



வாழ்த்துபவர்: திரு.இ.ஶ்ரீதரன்,
வேணுகா ரவல்ஸ், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(15819)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில்
05
12
1983

அரண் அடியில்
02
06
2013



அமரர்

### செல்வன் சுப்பிரமணியம் பார்த்தீபன்

திதி: 02.06.2023

பார்த்தீபா எம் உறவுகளின் பிரிவுகளால்
மாறாத சோகமதை இறைவன் தந்துவிட்டான்
மாறாத சோகம் தீராமல் வாழ்கின்றோம்.
உள்ளத்தில் சோகம் உதட்டில் சிரிப்பு
போலியான உலகினிலே பொய்யாக வாழ்கின்றோம்.
இறைவா எங்களிடம் இருந்து பிரித்தவர்களை
உன் கழலடியில் நிரந்தர அமைதியை கொடுத்து விடு.
ஓம் சாந்தி! சாந்தி!!! சாந்தி!!!

புலோலி (C-6659) சுப்பிரமணியம் பிரதீபன் குடும்பத்தினர்

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 18, கொழும்புத்துறை வீதி, ஆதன இல.581/86 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி றிச்சேட் கான்ஸ்போவர் எலிசபேத் குயின் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், குருநகர், மத்திய கிழக்கு வீதி இலக்கம் 25/2ஐ, சேர்ந்த றிச்சேட் கான்ஸ்போவர் அவர்கள் தமது அற்றோனி திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மூலம் மற்றும் திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போவர் மறுநாமம் திருமதி. எலிசபேத் குயின் றிச்சேட் கான்ஸ்போலரும் 27.10.2014ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சந்திரா ஶ்ரீதரன் முகதாவில் 2213ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் இல. 18/8, மத்திய கிழக்கு வீதி, குருநகரைச் சேர்ந்த சந்திரகுமார் நிறோசன் பெண் விதுஸ்ரா றெனுசியாவுக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், புதிய கடற்கரை வீதி 93ம் இலக்கத்தைச் சேர்ந்த சாந்தகுமார் நிரோசனும் பெண் விதுஸ்ரா றெனுசியாவும் 05.09.2016ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தேவராசா சுபாஜினி முகதாவில் 275ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், தண்ணீர்த்தாங்கி வீதி, இலக்கம் 9Aச் சேர்ந்த அன்ரன் ஜோன்சன் மங்களேஸ்வரனும் பெண் மேரி கஜன்சியாவுக்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை. **"அமரக்கோன் முதலியார் காட்டுத் தலைமடையும் மறுபிரிவுகளும்"** என்று வழங்கும் **"கொழும்புத்துறை தெருத் தோட்டம்"** நிலப்பரப்பு முந்நூற்றி எழுபத்தி ஐந்து (நிலப்பரப்பு 375) உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.கனகசபை அவர்களினால் 12.03.2012ல் அளந்து வரைந்த நிலஅளவைப்படத்தில் துண்டு 01 தொடக்கம் 10 வரையான துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 4976/12ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தின் படி நிலப்பரப்பு முந்நூற்றி எழுபத்தியாறு குளி பன்னிரெண்டு தசம் எட்டு (நிலப்பரப்பு 376 குளி 12.8) இதில் ஏற்கனவே அறுதியாக விற்கப்பட்டது போக மிகுதி நிலப்பரப்பு இருநூற்று இருபத்திரெண்டு குளி மூன்று தசம் ஒன்பது இரண்டு (நிலப்பரப்பு 222 குளி 3.92). இதில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபையால் 05.12.2014 ஆக திகதியிட்டு 6088A/14ம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் துண்டு 22 (Lot 22) எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு ஒன்று (நில. பர. 01) இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.கனகசபையால் 21.12.2014 இல் வரைந்த 6088A-22/14 இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 (Lot 1) எனச் சுட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்றுக்கும் எல்லை

கிழக்கு: குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 21 எனக் காட்டப்பட்ட ஆதனம்

வடக்கு: குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 9 என காட்டப்பட்ட ஆதனம்

மேற்கு: குறித்த 6088A/14ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 23 எனக் காட்டப்பட்ட ஆதனம்

தெற்கு: ஆறு மீற்றர் அகலப்பாதை இதடங்கலும் இன்னும் இவ்வாதனத்திற்கு தெற்கே உள்ள ஆறு மீற்றர் அகலமுள்ள பாதையால் பிரதான வீதிக்குப் போக்குவரத்து செய்யுமுரித்தும், இவ்வாதனம் யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் வருவதுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகம் J/61 கிராம சேவையாளர் பிரிவிலும் அமைந்துள்ளது.

தற்போது அன்ரன் ஜோன்சன் மங்களேஸ்வரனும் பெண் மேரி கஜன்சியாவும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அன்ரன் ஜோன்சன் மங்களேஸ்வரனும் பெண் மேரி கஜன்சியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்**
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

(C-6660)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்தத்திற்கு ஒரு நீதி: ஏனைய மதங்களுக்கு வேறொரு நீதியா?

# ஞானசாரதேரரை இதுவரை கைது செய்யாதது ஏன்?

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கேள்வி



(கொழும்பு)

**பௌத்தத்தை அவமதித்தமைக்காக நடாசாவை கைது செய்ய முடியும் என்றால் ஏனைய மதங்களை அவமதித்த ஞானசாரரை ஏன் கைது செய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க டுவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

நடாசா பௌத்தத்தை உள் நோக்கத்துடன் அவ மதித்தமைக்காக கைது செய்யப்பட்டார். அவரைக் கைது செய்ய முடியும் என்றால் இஸ்லாமிய மதத்தை அவமதித்த தேவாலயங்களையும் கிறிஸ்தவ வழிபாட்டு இடங்களையும் மசூதிகளையும் எரியூட்டிய ஞான சார தேரர் உட்பட ஏனைய பலரை ஏன் கைது செய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

முஸ்லிம்கள் தமிழ் பிரஜைகளிற்கு எதிரான வெறுப்புணர்வு பேச்சுக்கள் நடாசாவின் வார்த்தைகளை விடதீய நோக்கம் கொண்டவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குற்றவாளிகளை கைது செய்து தண்டிப்பதற்கு ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிற்கு இன்னமும் காலம் உள்ளது. அவ்வாறு அவர் செயற்பட்டால் அதுவே உண்மையான ஜனநாயக நாடாக காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பௌத்தர்களாகிய நாங்கள் பௌத்த கொள்கைகளை நேர்மையாக பின்பற்றினால் இன்றுள்ளது போல நாடு குழப்பத்தில் காணப்படாது எனவும் தெரிவித்துள்ள அவர், பௌத்தம் உயர்ந்த மதிப்பை பெற வேண்டியது அவசியம். ஆனால் ஏனைய அனைத்து மதங்களும் சமமான முக்கியத்துவத்தை பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி)

## மொத்த கையிருப்பு 3 பில்லியன் டொலர்

(கொழும்பு)

மே மாத இறுதியில் இலங்கையின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

## கலட்டி வீரகத்தி பிள்ளையார் ஆலய பிரம்மோத்ஸவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் ஆலய பிரமோத்ஸவம் எதிர்வரும் 12 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இத்திருவிழாவில் எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (4)

# பிளாஸ்ரிக் பொருட்களுக்கான தடைவிதிப்பில் தாமதம்

## சுற்றாடல் அதிகாரசபை

(கொழும்பு)

பிளாஸ்ரிக் கூடைகள், பிளாஸ்ரிக் மாலைகள் மற்றும் பல பிளாஸ்ரிக் பொருட்களை தடை செய்ய மத்திய சுற்றாடல் அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தாலும், அது மேலும் தாமதமாகும் என தெரியவந்துள்ளது.

பிளாஸ்ரிக் வைக்கோல், பிளாஸ்ரிக் மாலைகள், ஒரு முறை பயன்படுத்தும் குடிநீர் கோப்பைகள், பானம் கிளறி, ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸரிக் கோப்பைகள் (தயிர் கப் தவிர), பிளாஸ்ரிக் ஸ்பூன்கள் மற்றும் ஃபோர்க்ஸ் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனையை தடை செய்வது தொடர்பாக கடந்த பெப்ரவரி மாதம் சுற்றுச்சூழல் அமைச்சகம் வெளியிட்ட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

அதன்படி ஜூன் 1 முதல் இந்தத் தடை அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்தத் தடை தொடர்பான வர்த்தமானியின் பல தொழில்நுட்ப விடயங்கள் திருத்தப்பட்டு சட்ட வரைபு திணைக்களத்திடம் விரைவில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நடவடிக்கைகள் அநேகமாக அடுத்த வாரத்திற்குள் நிறைவடையும் என்றும் அதிகாரசபை குறிப்பிடுகிறது.

இது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் சுபுன் எஸ். பத்திரகே இந்த தடை தொடர்பான வர்த்தமானியை ஜூன் மாத முற்பகுதியில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். (நி)

## சர்வதேச நாணய நிதிய பிரதிநிதி-ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடல்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் கென்ஜி ஒகமுராவிற்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் தற்போது நடைபெற்று வரும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (நி)

# டெங்கு அபாய பிரதேசங்களின் எண்ணிக்கை 61 ஆக அதிகரிப்பு

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

டெங்குத் தொற்றின் அதிக அபாயம் உள்ள பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்ட மருத்துவ அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வெப்பமான மற்றும் இடை விடாத மழையுடன் கூடிய காலநிலையே டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு கார்ணமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இதுவரை 39 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மே மாதத்தில் மாத்திரம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 290 ஆக பதிவாகியுள்ளது.

தற்போது பதிவாகியு ள்ள டெங்கு நோயாளர்கடி ளில் 50 வீதமானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர். (நி)

# நுளம்புகளை விரட்ட வெற்றிலை தைலம்

## ஆராய்ச்சி நிறுவனம் விசேட அறிவிப்பு

(கொழும்பு

நுளம்புகளை விரட்டும் சுருளை எரிக்கும் போது வெளியாகும் புகை சிறு குழந்தைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், அதற்கு மாற்றாக வெற்றிலையில் இருந்து தயாரிக்கப்படும் தைலத்தினை கொசு விரட்டிகளாக பயன்படுத்தலாம் என இடைக்கலா சாரம் மற்றும் வெற்றில்ல ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளன.

வெற்றிலைய்யை பிரித்தெடுத்த வெற்றிலையைப் பயன்படுத்தி இந்தப் பூச்சு தயாரிக்கலாம். மேலும் சந்தையில் விற்கப்படும் பல்வேறு பொருட் களைக் கொண்ட நுளம்பு விரட்டி பொருட்களை குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதை விட, வெற்றிலையில் இயற்கையான கொசு விரட்டும்குணம்உள்ளது என இடைக் கலாசார மற்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை இயக்குநர் பிரவீனா திஸாநாயக்க தெரிவித்தார்.


உற்பத்தியாளர் இருந்தால், நுளம்பு விரட்டி திரவத்தை தயாரிக்கவும் முடியும் என்றும் வெற்றிலை தொடர்பான இந்த மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் அனைத்தும் தங்கள் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய நீண்ட கால ஆராய்ச்சியின் முடிவுகள் என்றும் வெற்றிலை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஒரு வருடத்தில் வெற்றிலையின் விலை வீழ்ச்சியினால் வீணாகும் நிலை காணப்படுவதாகவும், அவ்வாறான காலங்களில் வெற்றிலை தொடர்பான பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களை செய்து விவசாயிகள் வருமானம் பெற முடியும் எனவும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் களமிறங்குவது குறித்து டோனி பரிசீலனை செய்ய வேண்டும்

## தொழிலதிபர் ஆனந்த் மகிந்திரா



குஜராத் அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் வென்று ஐந்தாவது முறையாக சம்பியன் பட்டம் வென்ற சென்னை அணியையும் அதன் கப்டன் டோனியையும் பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

ஐ.பி.எல் போட்டி முடிந்த பிறகு அடுத்த சீசனிலும் விளையாடுவது குறித்து டோனி கூறியதாவது. மிகவும் உணர்வுபூர்வமான இறுதிப்போட்டியாக இந்த போட்டியை பார்க்கிறேன். என்னுடைய ஓய்வை அறிவிக்க இதுதான் சிறந்த தருணம்.

ஆனால், எல்லா இடங்களிலும் எனக்கு கிடைத்த அன்பு அளவு கடந்தது. இங்கிருந்து இத்துடன் கிளம்பி விடுவது எளிதானது.

ஆனால் கடினமான விடயம் என்னவென்றால். 9 மாதங்கள் கடினமாக உழைத்து மற்றொரு ஐ.பி.எல் விளையாட முயற்சிப்பது.

ஓய்வு குறித்து யோசிக்க இன்னும் 8 முதல் 6 மாதம் இருக்கிறது என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் டோனியின் முடிவு குறித்து டுவிட் செய்துள்ள தொழிலதிபர் ஆனந்த் மகிந்திரா. என்சிசி தொடர்பான ஆய்வுக் குழுவில் அவருடன் பணியாற்றினேன்.

ஆடுகளத்தில் எவ்வளவு தீவிரமாக செயலாற்றுகிறாரோ, அதே அளவுக்கு அவரிடம் அறிவார்ந்த சிந்தனையும் உள்ளது என உணர்ந்தேன்.

புதுமையான விடயங்களைச் செய்வதில் அவர் ஆர்வமாக இருந்தார். நிச்சயம் டோனி வருங்காலத்தில் ஒரு தலைவராகத் திகழ்வார்.

டோனி அடுத்தாண்டு ஐ.பி.எல் போட்டியில் விளையாட உள்ளது மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருப்பினும் அவர் அரசியலுக்கு வர வேண்டும் என விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

### போட்டியின் போது காயம்

# மருத்துவமனையில் சிகிச்சை பெறவுள்ள எம்.எஸ்.டோனி



ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் இந்த சீசனில் முதல் முறையாக 3 நாட்கள் ஐ.பி.எல் இறுதிப் போட்டி நடந்தது.

அகமதாபாத்தில் நடந்த இறுதிப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

இதில் 5 விக்கெட்டு வித்தியாசத்தில் சி.எஸ்.கே வெற்றி பெற்றது. இதன் மூலமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 ஆவது முறையரக சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.

இந்தத் தொடரின் லீக் போட்டிகளில் டோனி விளையாடும் போது முழங்காலில் காயம் ஏற்பட்டது. சில போட்டிகளில் கீப்பிங் செய்யும் போது அதை காண முடிந்தது.

அந்தக் காயத்துடன் தற்காலிகமாக சிகிச்சை எடுத்துக் கொண்ட நிலையில் இறுதிப்போட்டி வரை அவர் விளையாடினார்.

இந்த நிலையில், முழங்கால் காயம் உட்பட பல காயங்கள் காரணமாக இன்னும் ஒரு வாரத்தில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட இருக்கிறார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2842

**விந்துஜா**



2 மாதம் படுத்துக் கொண்டு இருந்தால் 13 இலட்ச ரூபாய் சம்பளம் தருகிறது நாசா. இந்த வேலையில் மட்டும் சேர்ந்தா கண்டிப்பா நமக்கு டபுள் ப்ரோமோஷன் தான்.

**சதீஸ்**

கடைசி ஓவர்ல முதல் 4 போல் 3 ரன்தான் குடுத்திருந்தேன். அப்புறம் ஒருத்தன் வந்து ஜூஸ் தரப் போல நெஹ்ரா இப்படி போட சொன்னாருன்னு சொன்னான். ஊதிட்டான் சார்



**சாரங்கன்**

இப்படி அநியாயமா புளிய கரைச்சி பிரியாணி பண்ணி வச்சிட்டியே பாவி மகளே




என்னது பிரியாணிக்கு புளி போடக்கூடாதா?

**கண்ணன்**

டேய் வீரபாகு

என்னடா சொல்லு



நேத்து நம்ம கிளாஸ் பொண்ணுக்கிட்ட சௌமியா, உங்கம்மா எனக்கு மாமியாருன்னு சொன்னீல. அது இன்னைக்கு அவங்க அம்மாவ கூட்டிட்டு வந்துருக்கு.

**ரேவதி**

கடைசி பெஞ்சில உட்கார்ந்து இருப்பவருக்கே அறிவு அதிகம்னு ஒரு ஆய்வு சொல்லுது. ஆமா.. யாரு ஆய்வு நடத்தினாங்க?



எங்கூட கடைசி பெஞ்சில உட்கார்ந்திருந்வனுங்க தான்..

**ரேகா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் தொற்றா நோய்களால் உணவுகளில் அவதானம் தேவை

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் தொற்றா நோய்களின் பரவல் அதிகரிப்புக் காரணமாக சர்க்கரை, உப்பு, கொழுப்பு உணவுகளை உட்கொள்வதில் அவதானம் தேவையென சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் பெற்றோர் தமது குழந்தைகளின் போஷாக்கு குறித்து அக்கறை கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

குறிப்பாக சந்தையில் விற்கப்படும் குளிர்பானங்கள் ஆபத்தை விளைவிக்கலாமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் போஷாக்குப் பிரிவு பணிப்பாளரும் விசேட மருத்துவ நிபுணருமான லக்மினி நயனா மகோத ரத்ன ஊடகங்களுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் போல உணவு வகைகளைப் பிரித்துக்கொள்ள வேண்டும். பச்சை சிறந்த தெரிவாகவும் மஞ்சள் அவதானத் தெரிவாகவும் சிவப்பு கட்டுப்பாட்டுத் தெரிவாகவும் கொள்ள வேண்டும்.

பச்சைவகை உணவுகள் ஊட்டச்சத்துகளின் ஆதாரங்கள். மஞ்சள் உணவு, பானங்களைத் தெரிவுசெய்யும்போது அவதானம் தேவை. அத்துடன் சிவப்பு நிற உணவு, பானங்கள் அவசியமற்றவை. அவற்றைக் கட்டுப்பாட்டுடன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாட்டில் பல பாகங்களிலும் தொற்றா நோய்கள் பரவுகின்றமையால் சர்க்கரை, கொழுப்பு, உப்பு உணவுகளில் மிகுந்த அவதானம் தேவை.

சிறுவர்கள், இளைஞர்கள் கட்டுப்பாட்டுடன் உணவு வகைகளை உண்ண வேண்டியது அவசியம் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# மருத்துவர்கள் உள்ளிட்ட 14 துறைகளில் ஈடுபடுபவர்கள் இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும்

## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

(கொழும்பு)

மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், வங்கிகள், கட்டடக்கலை வல்லுநர்கள் உள்ளிட்ட 14 துறைகளில் ஈடுபடுபவர்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமாக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானி அறிவிப்பின்படி, இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்த மருத்துவர்கள், இலங்கை பட்டய கணக்காளர்கள் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், இலங்கையின் சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர்கள், இலங்கை பொறியியல் நிறுவனத்தின் உறுப்பினர்கள், இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 14 துறைகளை சேர்ந்தவர்கள் நேற்று முதல் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி 18 வயதை நிறைவு செய்தவர்கள் அல்லது 2024 ஜனவரி முதலாம் திகதி அல்லது அதற்குப் பின்னர் 18 வயதை அடையும்சகலரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்வது கட்டாயமாகும். (நி)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்
திரு. ஆ. வரதராஜன் அவர்களின்
அன்புத் தாயார்

அமரர் திருமதி. **ஆறுமுகம் இரத்தினம்**

அவர்கள் 30.05.2023 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(1812)



தோற்றம்: 20.12.1948
மறைவு: 30.05.2023

# சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 |
| தக்காளி | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 180 | 250 |
| கோவா | 350 | 400 | 400 |
| கரட் | 400 | 400 | 450 |
| பூசணி | 100 | 80 | 100 |
| புடோல் | 150 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 150 |
| பாகற்காய் | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 160 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 200 |
| பயற்றங்காய் | 400 | 350 | 350 |
| லீக்ஸ் | 380 | 400 | 450 |
| பீற்றூட் | 380 | 300 | 500 |
| கறிமிளகாய் | 350 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 1000 |
| போஞ்சி | 450 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 350 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 500 | 600 | 800 |
| முள்ளங்கி | 180 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 50 |
| வல்லாரை | 40 | 50 | 40 |
| ஈரப்பலா | 180 | 200 | -- |

# இராசிபலன்

02.06.2023
வைகாசி 19, வெள்ளிக்கிழமை
திரயோதசி முற்பகல் 11.40 மணிவரை

சுவாதி காலை 5.55 மணிவரை
சுபநேரம் -5.52-7.22 மணிவரை
இராகுகாலம்- 10.22-11.52 மணிவரை

வைகாசி விசாகம்
சந்திராஷ்டமம்
அச்சுவினி

வளவன்




மேஷம்

குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், உடல்நலன் சீராகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




கடகம்

நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



துலாம்

மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், உடல்நலனில் அதிக அக்கறை காட்டும் நாள், பயணத்தால் பலனுண்டு, ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.



மகரம்

ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும்.



ரிஷபம்

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், உள்ள மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.



சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



விருச்சிகம்

ஆதாயமில்லாத அலைச்சல்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.



கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.



மிதுனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.



கன்னி

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.



தனுசு

இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.



மீனம்

குடும்பத்தில் சிறுசிறு விவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.

**அதிகாலை எழாதவன் வேலை அழுதாலும் தீராது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணையில் கடலட்டைக்குஞ்சு உற்பத்தி நிலையம் திறப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் கடலட்டைப் பண்ணைகள் அதிகரித்துள்ள நிலையில் அவற்றுக்கான கடலட்டைக் குஞ்சு கிடைப்பனவு பாரிய பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

இன்னிலையில் VR International (pvt) Ltd நிறுவனத்தினால் வேலனை பிரதேச செயலர் பிரிவின் மண்கும்பான் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நிறுவன இயக்குநர் ஸ்ரபன்சன் தலைமையில் கடலட்டைக் குஞ்சு உற்பத்தி நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிறுவனத்தினால் கடலட்டைக் குஞ்சுகள் செயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப் படுவதனால் கடலட்டைக் குஞ்சுக்கான தட்டுப்பாடு இனிவரும் காலங்களில் குறையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (4-106)

# பனை வளத்தை தேவையற்ற விதத்தில் அழிப்பதற்கு இடமளிக்க முடியாது

## அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அழிக்கப்படும் முக்கியமான வளங்களில் ஒன்றான பனை வளத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அறிவுரை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தீவகப் பகுதிகளில் பனைவளம் அழிக்கப்படுவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அபிவிருத்தி குழுத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மேலும் தெரிவிக்கையில், அல்லப்பிட்டியில் தனியார் ஒருவரால் தொடர்மாடி குடியிருப்பு ஒன்றை கட்டுவதற்காக இரவோடு இரவாக 200 பனைகள் தறித்து எரிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது எழுவைதீவு பகுதியில் தனியார் காணிகளில் உள்ள பனைகள் தறிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவதாக குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதன்போது அபிவிருத்தி குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பனை அபிவிருத்தி சபை அதிகாரியை பதிலளிக்குமாறு கோரிக்கை விடுத்தார். இதன் போது பதில் அளித்த பனை அபிவிருத்தி சபை அதிகாரி, கடந்த வருடம் 10 ஆயிரம் பனைகளை தறிப்பதற்கான கோரிக்கைகள் தமக்கு கிடைக்கப் பெற்றதாகவும் அதில் 3ஆயிரம் கோரிக்கைகளை நிராகரித்ததாகவும் 7 ஆயிரம் பனைகளை தறிப்பதற்கான அனுமதியை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

இதன்போது கேள்வி எழுப்பிய அமைச்சர் 7ஆயிரம் பனைகளை தறிக்க ஏன் அனுமதி வழங்கினீர்கள் எனக் கேட்டார். இதன்போது பதிலளித்த அதிகாரி, சிலர் வீட்டுத் திட்டங்களுக்காக தமது சொந்தக்காணியில் உள்ள பனைகளைத் தறிப்பதற்கு அனுமதி கேட்டார்கள், சிலர் தமது தனியார் காணிகளில் உள்ள பனை மரங்களை தறிப்பதற்கான அனுமதியை கேட்டார்கள் என தெரிவித்தார்.

இதன் போது பதில் அளித்த அபிவிருத்திக் குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த காலங்களில் எவ்வாறு நடந்ததோ அது தொடர்பில் எனக்கு தெரியாது. இனிமேல் சொந்தக் காணி எனக் கூறி பனை வளத்தை தேவையற்ற விதத்தில் அழிப்பதற்கு இடம் அளிக்க முடியாது. ஆகவே, யாழ். மாவட்டத்தின் பனை வளத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பிரதேச செயலாளர்கள், பனை அபிவிருத்தி சபை ஆகியோரிடம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால் என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4-104)

# யாழ்.நூலகம் எரிப்பு நினைவுதினம் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் கலாசார படுகொலை என கூறப்படும் தென்கிழக்காசியாவிலேயே பெரிய நூலகமாக திகழ்ந்த யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்ட 42 ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று யாழ். நூலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொது நூலக நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நிகழ்வானது யாழ். பொது நூலகத்தில் பிரதம நூலகர் செல்வி. ராகினி நடராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது யாழ்ப்பாண பொதுநூலகம் எரிக்கப்பட்ட போது அதனுடன் தொடர்புடைய சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

உயிரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (4-104)

# பல தடவை மகஜர் அனுப்பியும் ஜனாதிபதி கண்டுகொள்ளவில்லை

## வடக்கு கடற்றொழிலாளர்கள் ஆதங்கம்

(கரணவாய்)

ஜனாதிபதியை சந்திப்பதற்காக மூன்று தடவை மகஜர் அனுப்பியும் எந்தவித அழைப்பும் இதுவரை இல்லை என வடமாகாண கடற்றொழிலாளர் சமாசங்களின் பிரதிநிதி அன்னலிங்கம் அன்ராசா கவலை தெரிவித்துள்ளார்.



யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த ஆறு மாதங்களுக்குள் மூன்று தடவைகள் தம்மால் மூன்று மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதில் முதலாவது மகஜர் யாழ்ப்பாண மஹா விகாராதிபதி ஊடாக அனுப்பியிருந்தோம்.

அதனை தொடர்ந்து வடக்கு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஊடாக மகஜரை அனுப்பியிருந்தோம். அதற்கும் எந்தவிதமான ஜனாதிபதியிடமிருந்து சந்திப்பதற்கான அழைப்பும் இதுவரை கிடைக்கவில்லை.

நாங்கள் வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்கள் ஒன்றிணைந்து எங்களுடைய வட மாகாண மீனவர்களுடைய பிரச்சினைகளை முன் வைத்து வருகிறோம்.

பிரச்சினைகளை தெளிவுபடுத்தி வருவதோடு எங்களுடைய கோரிக்கைகளையும் முன்வைத்து வருகிறோம்.

இந்த வகையிலே பருத்தித்துறை பிரதேசத்திலேயே வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாக எங்களுடைய அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு மூன்றாவது மகஜராக நாங்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு 2023 ஆம் ஆண்டு நான்காம் மாதம் பருத்தித்துறை பிரதேச செயலர் ஊடாகவும் மகஜர் அனுப்பியிருந்தோம். ஆனால் இதுவரை எவற்றிற்கும் ஜனாதிபதி பதிலளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (4-60)

# கிளிநொச்சியூடாக வெளிமாகாண மணல்கள் கொண்டு செல்லத் தடை

## அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் முடிவு

(கண்டாவளை)

சட்டவிரோத மண் அகழ்வை தடுப்பதற்கான நடவடிக்கையாக நேற்று முதல் வெளிமாகாணங்களில் இருந்து கொண்டுவரப்படும் மணல்கள் கிளிநொச்சி மாவட்டத்தினூடாக கொண்டு செல்லல் தடை செய்யப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் -கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகமாக சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதாக பொதுஅமைப்புகள், பாராளு மன்ற உறுப்பினர்கள் வைத்த குற்றசாட்டு தொடர்பான இன்றைய கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் அநேகர் வெளிமாகாணத்தில் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தியே மாவட்டத்தில் சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதாகவும் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவியதுடன் சம்பந்தப்பட்ட துறைசார் அமைச்சர், துறைசார் திணைக்கள தலைவர் என்பவர்களுடன் உடனடியாக தொடர்பு கொண்டு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சட்டவிரோத மண் அகழ்வை தடுப்பதற்கான நடவடிக்கையாக நேற்று முதல் வெளிமாகாணங்களில் இருந்து கொண்டு வரப்படும் மணல்கள் கிளிநொச்சி மாவட்டத்தினூடாக கொண்டு செல்லல் தடைசெய்யப்படுவதாகவும் உள்ளூரில் மணல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக நிறுத்துவதற்கும் துறைசார் அதிகாரிகள், பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடில்லை

## பெற்றோலிய விற்பனையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சமீபத்தில் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவுவதாக பெற்றோலிய விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விலை சீர்திருத்தத்தினால் பெரும் பாலான மீள்நிரப்பு நிலையங்கள் தமது எரிபொருள் தேவைக்கான முன்பதிவு களை செய்யவில்லையென சங்கத்தின் துணை செயலாளர் கபில தெரிவித்தார்.

முன்பதிவுகளை செய்யாததால் அவர்கள் தேவையான புதிய எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதனால் இப்போது நாட்டில் பெற்றோல் மற்றும் டீசலுக்கான தட்டுப்பாடு தோன்றியுள்ளது. சில பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அண்மையில் வாகனங்கள் வரிசையில் நிற்பதைக் காணமுடிகிறது. ஆனால் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை. தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு சிலரால் உருவாக்கப்பட்டதே என்றும் அவர் தெரிவித்தார். (நி)

ஓம் நமசிவாய
முத்துமாரி அம்மன் துணை

# சைவமும் தமிழும் சகத்தென்றும் நிலைத்திருக்கும் காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ரதோற்சவம் வடம் பிடிக்க ஹறீம் ரீங்கார ஒலி எழுப்பி வைகாசி விசாகத் திரு நாளில் உலா வருக தாயே வருகவே



**சொற்களினாலே புகழவும் நாக்கு உள்ளே கலங்கும்**
**அரிய தியானத்தினால் உட்கொள்ளவும்**
**மனாங்கலங்கும் உரையுந் தடுமாறும்**
**அமைத்துக் கொள்ளலாகாது குணங்களாகிய**
**ஆறுமுகங்கள் ஆன்ற திருமேனியோடு சிறப்பாகத்**
**தோற்றியருளிய வேலாயுத கர நாயகரே**
**உமது திருவடிகள் காத்தருள்க.**

• • • • • • • • • • • • • • • • • • • • • • • •

**ஓங்கார நாயகி ஸ்ரீமுத்துமாரி அம்மன்**
**திருவடி தொழுது பணிபவர்க்கு, அடியார்களின்**
**அச்சமும்,கவலையும்,போக இனிய மொழி**
**கூறி இன்னருள் வழங்கும்**
**இறைவி இவளேயாகும்.**

**ஓங்காரி என்பாள் அவளொரு பெண்பிள்ளை**
**நீங்காத பச்சை நிறதனை யுடையவள்**
**ஆங்காரி ஆகிய ஐவரைப் பெற்றிட்டு**
**ரீங்காரத் துள்ளே இனிது இருந்தாளே.**
***திருமந்திரம்-1073***

"ஓங்கார சொரூபியாகிய பராசக்தி பெண்ணின் பெருந்தகை. அருளோன். ஆண்டான். அரன்.அரி.அயன் என்றும் ஐவரை உண்டாக்கி அவர்கள் மூலம் ஐந் தொழிலும் நிகழ்த்துபவள். இவள் ரீங்கார ஒலி எழுப்பும் இரீம் (ஹறீம்) என்றும் மந்திர எழுத்துடன் இருந்து மகிழ்பவளாம்.

அழகிய "நமசிவாய" என்றும் சொல்லின் பொருள் ஆவாள்.நீயே கதி.என்று அவளைத் தேடி வந்து தஞ்சம் அடைபவர்க்கு திருவடி தொழுது பணிபவர்க்கு அவர்களது அச்சமும் கவலையும் போக இனிய மொழி கூறி இன்னருள் வழங்கும் இறைவி இவளே யாகும்.

நம் முன்னோர்கள் ஆண்டு ஒரு முறை ஆகம விதி வழுவாது இவ்விழாக்களைச் செய்தும் செய்வித்தும் வந் தனர். எம்மை சிவத் தன்மையடையச் செய்து உய்வித்தலே திருவிழாக்களைச் செய்வதன் உட்பொருளாகும்.

இவ்விழாவில் கொடிமரம் பதியாகிய சிவத்தைக் குறிப்பதாகும். அதில் ஏற்றப்படும் **கொடிச்சீலை** பசுவாகிய உயிரைக் குறிப்பதாகும்.

கொடிச்சீலையோடு சேர்ந்திருக்கும் **தருப்பைக் கயிறு உயிரை வருத்தும் பாசமாகும்.** கொடியேற்ற விழாவில் தற்பைக் கயிறுடன் கொடிச்சீலையை கொடிமரத்தில் சுற்றுவதில் **முத்தி நிலையிற் பாசம் ஒடுங்க உயிர்ச் சிவத்துடன் கலந்து பேரின்பமடையும்.**

கொடி மரத்திற்கு அப்பால் உள்ள பலிபீடத்தை அடியவர்கள் வணங்கித் தமது **செருக்கை** பலியிடுவர்.

மூல அம்பாளை நோக்கி இருக்கும் சிங்கம், பாசங்களில் இருந்து நீங்கி சிவ தன்மையடைந்த உயிர். புறப்பொருட்களை நோக்காது அம்பாளை நோக்கும் தன்மையைக் காட்டுவது.இறைவனுடன் அருளுருவம் பெற்று நிற்கின்ற தன்மையைக் காட்டுவது.

திருக்கோயில்களில் நிகழும் ஆண்டு விழாக் களைத் தரிசிக்க செல்வோர் விழாக்களின் உண் மைப் பொருளை உணர்ந்து **ஆசாரசீலராய்** விரதமிருந்து இயன்ற அளவு நிவேதனப் பொருட் களுடன் சென்று. **தம்ப விம்ப கும்ப** பூசைகளை மெய் அன்போடு. பிற வார்த்தை பேசாது. சைவமும் தமிழும் தழைத்தோங்க வைகாசி விசாகத்திரு நாளில் அபிராமி அந்தாதியும் திருநெறித் தமிழை யும் ஓதுவோம்.

சைவமும் தமிழும் சகத்தினில் நிலைத்திருக்க பாடுபடுவோம்.ஆலயங்களில் அடியவர்கள் அருள் மிகு கற்பகக்கிரக சுவாமிக்கு நேரே நிற்பதைத் தவிர்த்து நாற்பத்தைந்து பாகையில் நடுப்பாதை வில க்கி எல்லா அடியார்களுக்கம் வழிபட வழிசமைத்து பிற வார்த்தை பேசாமல் திருமுறைகளை ஓதி கரம் கூப்பி சிரம் தாழ்த்தி அம்பாளை வழிபடுவோம்.

**"ஓம் நமசிவாய"**
**குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மா!**
**தாயே நீ வாருமம்மா தற்பறையாய் நின்ற சக்தி!**
**வாக்கிட்டால் தப்பாது வரம் கொடுத்தால்**
**பொய்யாது!**
**ஆறு தப்பு நூறு பிழை அடியார்கள் செய்தாலும்!**
**தாயே மனம் பொறுத்து**
**தயவாகக் காருமம்மா!**
**சைவமும் தமிழும் சகத்தென்றும்!**
**நிலைத்திருக்க இந்த வைகாசிவிசாகத்**
**தினத்தில் வழிபடுவோமம்மா!**



(சி-6657)

**க.கு.க.சிவபாலன் (K.K.K)**

# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

செல்வி.
**துரைராசா புனிதா**
(ஆசிரியர்)
(பயிற்றப்பட்ட வணிகக்கல்வி- SLTS-I)
கலைமாணி (யாழ்.பல்கலைக்கழகம்)
வெளிவாரி பட்ட மேற்கல்வி டிப்ளோமா
(திறந்த பல்கலைக்கழகம்)
(யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)

சேவை விபரம்
யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை
30.05.1989 -01.01.1993
யா/பலாலி ஆசிரிய கலாசாலை
02.01.1993-31.12.1994
யா/கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
01.01.1995-06.01.1997
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தி.
07.01.1997 -01.05.2001
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்
02.05.2001-26.03.2015
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
27.03.2015-02.06.2023
(முழு நேரம்)
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்
02.05.2015-02.06.2023
(பகுதி நேரம்)




**அகவை அறுபதில் ஆசிரியர் பணியிலிருந்து ஒய்வு பெறும் எமது சக ஆசிரியரின் ஒய்வுக் காலம் சீரும் சிறப்புமாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.**

(15813)

வாழ்த்துவோர்–
பாடசாலை நலன்புரிக்கழகம்,
யா/ அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.



மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக நயினாதீவு ரஜமகா விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ நவடகல பதும கீர்த்தி திஸ்ஸ தேரரை நேற்று வியாழக்கிழமை சிவசேனை அமைப்பின் சிவத் தொண்டர்கள் அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். (படம்-கஜிந்தன்)

# நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாத சுவாமி இன்று ரதோற்சவம்

**உணர்ந்துடனே நிற்கும் உள்ளொளியாகி**
**மணல்கமழ் பூங்குழல் மங்கையுந்தானும்**
**புணர்துடனே நிற்கும் போதருங்காலைக்**
**கனிந்தெழு வார்க்குக் கதியளிப் பாளே.**



சிவ ஒளியோடு கூடிச் சிவனின் அகஒளியில் தெரிவாள்.
வாச மணமுள்ள மலர்களைச் சூடிய கூந்தல் உடையும்
சக்தியும் சிவனும் சேர்ந்து இருக்கும் நிலையில்,
"நல்லூர் கமலாம்பிகா ரதோற்சவம்"வடம் பிடித்து,
அச்சக்தியை எண்ணித்துதிப்பவர்களுக்கு நற்கதி,
மேல்நிலை அளித்தருவாள்.



(சி-6658)

**க.கு.க.சிவபாலன் (K.K.K)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவுடன் நல்லுறவை நீடிக்க முடியாது

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்



(டில்லி)

இந்திய மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் சீனாவுடன் நல்லுறவை நீடிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார்.

சீனாவிடமிருந்து இந்தியா மிகவும் சிக்கலான சவாலை சந்தித்து வருவதாக தெரிவித்த அவர் மேலும் விளக்கம் அளித்த நிலையில் இரு நாட்டு நல்லுறவு என்பது சமநிலையில் ஏற்பட வேண்டும் என்றும் அடுத்த நாட்டின் விருப்பம் போல அமைய முடியாது என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அனந்த் தேசிய பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்திய ஜெய்சங்கர், கடந்த மூன்று ஆண்டுகளாக சீனாவுடனான எல்லைப் பிரச்சினை வெளிப்படையாக உள்ளது. எல்லையில் அமைதி குலைந்தால் இருநாடுகளின் நல்லுறவு நீடிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் எல்லையில் முந்தைய நிலையை சீனா மாற்றுவதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் ஜெய்சங்கர் தெரிவித்தார். (நி)

# உக்ரைனுக்கு மீண்டும் இராணுவ உதவிகளை வழங்கியது அமெரிக்கா



(வோஷிங்டன்)

உக்ரைனுக்கு சுமார் 300 மில்லியன் டொலர் மதிப்பிலான இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக அமெரிக்கா மீண்டும் அறிவித்துள்ளது.

அதில் ஏவுகணை லாஞ்சர்கள், பீரங்கிக்கான வெடிமருந்துகள் ஆகியவையும் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி போர் தொடுத்தது.

இந்தப் போர் தொடங்கி ஓராண்டையும் கடந்துள்ளது. போரினால் பாதிப்பு அடைந்துள்ள உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஆயுதங்கள், தளபாட உதவிகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போர்க்களங்களில் அதிகரிக்கும் ட்ரோன் பயன்பாடு சர்வதேச சட்டம் மூலம் கட்டுப்படுத்த வேண்டும்

வான்வெளி தாக்குதலுக்கு ட்ரோன்களை பயன்படுத்துவது உலக நாடுகளில் அதிகரித்துள்ளதால் இது பேராபத்தாக முடியுமோ? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ட்ரோன் கண்டுபிடிக்கப்பட்ட போது உளவு பார்ப்பதற்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பயன்படுத்தின. எதிரி நாடுகள் எல்லைக்குள் சென்று உளவு பார்ப்பதாக குற்றச் சாட்டு எழுந்த வண்ணம் உள்ளன.

தற்போது எந்த இடத்தில் இருந்து ட்ரோன் தங்கள் எல்லைக்குள் ஊடுருவுமோ என்ற அச்சம் ஒவ்வொரு நாடுகளுக்கும் தலைதூக்கியுள்ளது. உலக வல்லரசு மற்றும் வளர்ந்த நாடுகள் சர்வதேசச் சட்டம் கொண்டு வந்து இதை கட்டுக்குள் கொண்டு வந்தால் மட்டுமே, ட்ரோன் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும்.

மோதல் நேரங்களில் அமெரிக்கா உட்பட 100 இற்கும் மேற்பட்ட நாடுகள் ட்ரோன் பயன்படுத்துகின்றன. குறைந்த செலவு என்பதால் பயங்கரவாதிகளும் அதிகமாக பயன்படுத்துகின்றனர்.

உக்ரைன்-ரஷ்யப்போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. தற்போது நேருக்கு நேர் மோ0தல், விமான தாக்குதல் குறைந்து ட்ரோன்களை பயன்படுத்தி வருகின்றன. செலவும் குறைவு, வீரர்கள் மரணமும் கிடையாது. சேதப்படுத்தும் இடம் அதிகம். இதனால் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர்.



கடந்த செவ்வாய்க்கிழமை உக்ரைன் திடீரென ரஷ்யா மீது ட்ரோன் தாக்குதல் நடத்தியது. சுமார் 8 ட்ரோன்கள் இதற்காக பயன்படுத்தியதாக ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

வான்வெளித் தாக்குதலுக்கு ட்ரோன்களை பயன்படுத்துவது உலக நாடுகளில் அதிகரித்துள்ளதால் இது பேராபத்தாக முடியுமோ? என்ற கேள்வி எழுந்துள்ளது. (நி)

# நியூசிலாந்தில் பாரிய நிலநடுக்கம்

(வெலிங்டன்)

நியூசிலாந்தின் ஒக்லன்ட் தீவுக்கு அருகில் நேற்று பாரிய நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த நிலநடுக்கம் 6 தசம் 2 ஆக பதிவாகியுள்ளதாக அந்த நாட்டு புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தில் உயிர்ச் சேதங்களோ மற்றும் பொருட் சேதங்களோ ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுனாமி அபாயம் ஏதும் விடுக்கப்படவில்லை என அந்த நாட்டு வானிலை திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ரஷ்யத் தூதரகங்களை முடக்க ஜேர்மன் முடிவு

(பேர்லின்)

ஜேர்மனில் இயங்கி வரும் 5 ரஷ்யத் தூதரகங்களில் 4 தூதரகங்களை மூடுவது என ஜேர்மன் அரசாங்க முடிவு செய்துள்ளதாக ஜேர்மன் வெளியுறவுத் துறை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் நேற்று தெரிவித்துள்ளார்.

"உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரியில் தொடங்கியது.

அதற்கு பல நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்தன. அதில் ஜேர்மனும் ஒன்றாகும்.

இதனை தொடர்ந்து, ரஷ்யாவின் எரிவாயு இறக்குமதியை நிறுத்தி ரஷ்யாவுக்கு எதிரான சர்வதேச தடைக்கு ஆதரவு அளித்தது.

மேலும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் பொருளாதார தடைகளை ரஷ்யா மீது விதித்தன.

இது தனது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என கருதி, ஜேர்மனியில் இருந்த 10 இற்கும் மேற்பட்ட ரஷ்யத் தூதர்களை வெளியேற்றியது.

இதன்பின், ரஷ்யாவில் பணியாற்றும் ஜேர்மன் அரசாங்க அதிகாரிகளின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையை 350 ஆக ரஷ்ய அரசாங்கம் குறைத்தது.

இதனால் ஜேர்மன் அரசாங்க தூதர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட எண்ணற்றோர் ரஷ்யாவை விட்டு விரைவில் வெளியேறவுள்ளனர்.

ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்கு பதிலடியாக, ஜேர்மனியில் இயங்கி வரும் 5 ரஷ்யத் தூதரகங்களில் 4 தூதரகங்களை மூடுவது என ஜேர்மன் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. (நி)

# லெபனான் மீது இஸ்ரேல் வான்வெளித் தாக்குதல் பாலஸ்தீனிய ஆயுதக் குழுவினர் பலி

(பாலஸ்தீனம்)

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வெளி தாக்குதலில் பாலஸ்தீனிய ஆயுதக் குழுவினர் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வரும் நிலையில் மேற்கு கரையின் சில பகுதிகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது.

குறித்த பகுதிகளில் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும் பாலஸ்தீனிய ஆயுதக்குழுக்களுக்கும் இடையே மோதல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் சிரியா எல்லையில் லெபனான் நாட்டின் குவசயா நகரில் பதுங்கி இருந்த பாலஸ்தீனிய ஆயுதக் குழுவினர் மீது இஸ்ரேல் விமானப்படை நேற்று முன்தினம் வான் வெளி தாக்குதல் நடத்தியுள்ளது.



இந்த தாக்குதலில் பாலஸ்தீனிய ஆயுதக்குழுவைச் சேர்ந்த 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும், 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலையடுத்து பாலஸ்தீனிய ஆயுதக்குழு இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதல் நடத்தலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் உள்ளிட்ட 22 நாடுகளில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு - ஐ.நா மீண்டும் எச்சரிக்கை

(ஜெனிவா)

**பாகிஸ்தான் உட்பட 22 நாடுகளில் கடுமையான உணவு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று ஐ.நா சபை தெரிவித்து உள்ளது.**

பாகிஸ்தான் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

அந்நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பு குறைந்து வருவதால் இறக்குமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் உணவு பொருட்கள், பெற்றோல், டீசல் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்து உள்ளது.

மேலும் கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. பாகிஸ்தானில் அரசியல் கொந்தளிப்பும் நிலவி வருவது அந்நாட்டை மேலும் சிக்கலில் தள்ளி உள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தானில் வரும் மாதங்களில் கடுமையான உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக ஐ.நா சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே பாகிஸ்தானில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று ஐ.நா சபை தெரிவித்திருந்த நிலையில் மீண்டும் எச்சரிக்கையை விடுத்துள்ளது. அதேபோல் ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சோமாலியா, தெற்கு சூடான், ஏமன், ஹைட்டி, சூடான் புர்கினா பாசோ, மாலி உட்பட 22 நாடுகளில் கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று ஐ.நா சபை தெரிவித்து உள்ளது. (நி)

## அழகிப் போட்டியில் மனைவிக்கு 2 ஆம் இடம்

### ஆத்திரத்தில் கிரீடத்தை துண்டு துண்டாக உடைத்த கணவன்



(ரியோ)

பிரேசில் நாட்டில் மிஸ் பிரேசில் அழகிப் போட்டியின் இறுதிப் போட்டி நடைபெற்றது. பல்வேறு கட்டங்களாக நடந்த தேர்வுகளின் அடிப்படையில் நதாலி பெக்கர் மற்றும் எமானுவெலி பெலினி ஆகிய 2 பேர் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றனர். இதைத்தொடர்ந்து வெற்றியாளரை அறிவிப்பதற்காக 2 பேரும் மேடை ஏற்றப்பட்டனர். பின்னர் போட்டியில் பெலினி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு அவருக்கு கிரீடம்சூட்டப்பட இருந்தது.

அப்போது போட்டியில் 2 ஆம் இடம் பிடித்த நதாலியின் கணவர் திடீரென மேடை ஏறினார். அவர் பெலினிக்கு சூட்டப்பட இருந்த கிரீடத்தை பறித்து தரையில் வீசி உடைத்தார். கீழே விழுந்த கிரீடத்தை மீண்டும் எடுத்து மறுபடியும் தரையில் அடித்து உடைத்தார். இதனால் அந்தக் கிரீடம் துண்டுதுண்டாக உடைந்தது.

இதைப்பார்த்த நடுவர்கள், விழா ஏற்பாட்டாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். விழா ஏற்பாட்டாளர்கள் ஓடி வந்து அவரை மேடையில் இருந்து கீழே இறக்கினர்.

இந்தச் சம்பவத்தை பார்வையாளர் ஒருவர் வீடியோ பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார். அந்த வீடியோ வைரலாக பரவி வருகிறது. (நி)

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் உபஜனாதிபதி மைக் பென்ஸ் போட்டி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் முன்னாள் உபஜனாதிபதி மைக் பென்ஸ், எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

63 வயதான மைக் பென்ஸ் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர். 2017 முதல் 2021 வரை, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கீழ் உபஜனாதிபதியாக பதவி வகித்தார்.

தற்போது 63 வயதான அவர், குடியரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தைப் பெறுவதற்கான பிரசாரங்களை எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளார் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பும் இத்தேர்தலில் போட்டியிடவுள்ளதாக ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உளவு செயற்கைக்கோளை ஏவும் வடகொரியாவின் முயற்சி தோல்வி

(பியாங்யாங்)

முதல் உளவு செயற்கைக்கோளை ஏவும் தமது முயற்சி தோல்வியடைந்துள்ளதாக வடகொரியா அறிவித்துள்ளது.

உளவு செயற்கைக்கோளுடன் விண்ணில் செலுத்தப்பட்ட ராக்கெட், முதல் மற்றும் இரண்டாம் கட்ட நிலைகளில் பிரச்சினைகளை எதிர்கொண்டு நடுவானில் வெடித்து கொரியாவின் மேற்கு கடலில் வீழ்ந்துள்ளது.

வடகொரியா தனது முதல் உளவு செயற்கைக்கோளை விண்ணிற்கு செலுத்துவதாக அறிவித்ததால், ஜப்பான் மற்றும் தென்கொரிய நாடுகளில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

வடகொரியாவின் வடமேற்கு பகுதியான டாங்சாங்-ரி-யில் இருந்து ராக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

ராக்கெட் ஏவப்படுவதை அடுத்து தென்கொரிய தலைநகர் சியோலில், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டியிருக்கும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும், எதிர்பார்த்த சேதம் ஏற்படாததால், எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. முன்னதாக வடகொரியாவின் உளவு செயற்கைக்கோள் ஏவப்படும் தகவலுக்கு பதிலடி கொடுத்த ஜப்பான், தனது எல்லைக்குள் ராக்கெட் வந்தால் அதனை சுட்டு வீழ்த்த உத்தரவிட்டு இருப்பதாக தெரிவித்து இருந்தது.

நீண்டதூர ஏவுகணை தொழில்நுட்பத்தை பயன்படுத்த வடகொரியாவிற்கு ஐ.நா பாதுகாப்பு சபை தடை விதித்துள்ளது. இந்த தடையை மீறியே வடகொரியா தனது உளவு செயற்கைக்கோளை விண்ணில் ஏவ முயற்சித்தது. (நி)

## புற்றுநோயைப் பொருட்படுத்தாமல் 72 வயதில் தங்கம் வென்று அசத்திய மூதாட்டி

(ஒட்டாவா)

கனடாவில் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட 72 வயதான பெண் ஒருவர் நீச்சல் போட்டித் தொடரில் தங்கப் பதக்கங்களை வென்று அசத்தியுள்ளார்.

கியூபெக்கைச் சேர்ந்த லினா கோர்டோயிஸ் என்ற மூதாட்டியே இவ்வாறு நீச்சல் போட்டித் தொடரில் சாதனை படைத்துள்ளார்.

கல்கரியில் நடைபெற்ற கனேடிய சிரேஷ்ட அழகியல் நீச்சல் போட்டித் தொடரில் இவ்வாறு வெற்றியீட்டியுள்ளார்.

ஒரு புறம் புற்று நோய்க்கான சிகிச்சை மறுபுறம் நீச்சல் பயிற்சி என அதீத மன வலிமையுடன் இந்தப்பெண் போட்டியில் பங்குபற்றி வெற்றிகளை பதிவு செய்து வருகின்றார்.



100 மீற்றர் பட்டர்பிளை மற்றும் 400 மீற்றர் மெட்லீ ஆகிய இரண்டு போட்டிகளிலும் அபார திறமைகளை வெளிப்படுத்தி தங்கப் பதக்கங்களை லினா வென்றெடுத்துள்ளார்.

எந்நேரமும் சிரித்துக் கொண்டு தீவிர பயிற்சியில் ஈடுபட்டு இந்த வெற்றியை அடைந்துள்ளதாக லினாவின் பயிற்றுவிப்பாளர் தெரிவிக்கின்றார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யக்கோரி

# வடக்கு- கிழக்கு பெண்கள் அமைப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புத் தேடி பணிப்பெண்களாக சென்று பல்வேறு காரணங்களால் இலங்கை திரும்ப முடியாது நிர்க்கதியாகியுள்ள பெண் தொழிலாளர்களை உடனடியாக இலங்கைக்கு திரும்பி கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி வடக்கு - கிழக்கில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

வடக்கு - கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினரால் நேற்றுக் காலை குறித்த போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இலங்கை அரசே வெளிநாட்டு வேலைக்காக செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய், அரச இலாபத்திற்காக பெண்களை விற்காதே, பெண்களை விலைக்கு வாங்காதே போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட




பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இறுதியில் அரசாங்கத்திற்கு வழங்குவதற்கான மகஜரை ஊடகங்களுக்கு வாசித்து காட்டியிருந்தனர்.

அதன் பிரதிகளை மனுஷ நாணயக்கார தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர், அலி சப்ரி - வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், பொது முகாமையாளர் - இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம், இலங்கை மனித உரிமைகள் ஆணையகம் ஆகியவற்றிற்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30-104-299-285-315-316)

# காற்றாலை மின் உற்பத்தி தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை

## அபிவிருத்தி குழு கூட்டத்தில் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

கிளிநாச்சி கௌதாரி முனையில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைப்பது தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்தியாவின் அதானி குழுமத்தினால் கௌதாரி முனைப் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் நிறுவுவதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கான ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதிக்காக நேற்று ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த செயற்றிட்டம் தொடர்பில் வாத பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குறிப்பிடுகையில் கடந்த 2018 ஆம் 2019 ஆம் ஆண்டுகளில் குறித்த பகுதியில் பல வாக்குறுதிகள் பாடசாலை களுக்கு வழங்கப்பட்டுமணல் எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது.

ஆனால் இங்கு எந்த வாக்குறுதிகளும் நடைபெறவில்லை. அதேபோல அதானி குடும்பமும் காற்றாலை மின் நிலையத்தை அமைப்ப தற்கு முன்னதாக அந்த மக்களுக்கு உறுதியான வாக்குறுதிகள் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு இருந்தார்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் குறிப்பிடுகையில் அந்த மக்களுக்கு முழுமையாக திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தப்படாது பொருட்கள் வழங்குவதாகவும் வாழ்வாதாரம் வழங்குவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-315)

# விவசாயிகளின் வாழ்வாதாரம் விசமிகளால் அழிப்பு



(கருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சார்வெளி பகுதியில் கடந்த 28 ஆம் திகதி நள்ளிரவு இனந்தெரியாத நபர்களால் விவசாயி ஒருவரின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுள்ளது.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சார்வெளி பகுதியில் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த கௌப்பி பயிர்கள் இனந் தெரியாதோர் களால் வெட்டி வீசப்பட்டுள்ளது.

நள்ளிரவில் வந்த கும்பல் ஒன்று குறித்த விவசாயியின் விவசாய நிலத்தின் காவல் வேலிகளை உடைத்து முள்ளுக்கம்பிகளை வெட்டி உட்சென்று பயிர்களை அழித்துள்ளனர்.

இச்சம்பவமானது தொடர்ச்சியாக பளை பிரதேசத்தில் இடம் பெற்றுவருவதாகவும் கடந்த ஆண்டும் அறுவடைக்கு தயார் ஆன 300மிளகாய் செடிகளும் வெட்டி வீசப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-316)

# பாடசாலை மாணவர்களிடம் சேட்டை விடும் இளைஞர்கள்

## பெற்றோர்கள் முறைப்பாடு

(கரணவாய்)

நெல்லியடி கரவெட்டி விக்னேஸ்வரா வீதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்தில்கல்வி கற்பதற்காக சென்று தனியார் வகுப்பை நிறைவு செய்து பிற்பகல் வகுப்பை முடித்துவீடு செல்லும் பொழுது மாணவ, மாணவிகளை இளைஞர்கள் ஒழுங்கைகள் வீதிகளில் நின்று சேட்டைகள் புரிவதாக பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனால் தனியார் கல்வி நிலையங்களுக்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வகுப்புகள் முடிந்து கூட்டிச் செல்வதற்காக காவல்நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இதனை நெல்லியடி பொலிஸ் பொறுப்பு அதிகாரி கவனத்தில் கொண்டு தங்களுடைய பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-60)

# நொதேண்பவர் நிறுவனம் யாழில் மீள செயற்பட முடியாது

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழில் சர்ச்சையை ஏற்படுத்திய நொதேண் பவர் அனல்மின் நிலையம் எனக்குத் தெரியாமல் யாழ்ப்பாணம் வராது என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு இரண்டாவது கூட்டத்தில் உடுவில் பிரதேச செயலாளரால் முன் வைக்கப்பட்ட கருத்து தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில் உடுவில் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கும் போது, யாழ்ப்பாணத்தில் கழிவு ஒயில் பிரச்சனையை ஏற்படுத்திய நொதேன் பவர் நிறுவனம் மீள செயல்படும் என்ற அச்சம் மக்களிடம் காணப்படுவது.

நொதேன் பவர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட கழிவு ஒயில் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் கிணறுகளை சுத்தம் செய்வதற்காக 20 மில்லியன் ரூபாக்கள் ஒதுக்கப்பட்டது.

ஆனால் குறித்த நிதியை இன்னும் பலர் பெறாது இருக்கிறார்கள். அதற்குக் காரணம் நிதியை பெற்றுக் கொண்டால் குறித்த நிறுவனம் மீளச் செயற்படும் என்ற அச்சமே என தெரிவித்தார்.

இதன் போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நொதேண் பவர் நிறுவனம் மீள இயங்குவது தொடர்பில் கடந்த காலங்களில் பேசப்பட்டது உண்மை.

ஆனால் நான் உறுதியாக கூறுகிறேன் யாழில் எனக்கு தெரியாமல் குறித்த நிறுவனம் மீள செயற்பட முடியாது, பயம் கொள்ளத் தேவையில்லை என தெரிவித்தார். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# தாவரவைரஸ்கள் பற்றிய ஓர் அறிமுகம்

தாவரங்களில் நோய்களை உண்டாக்கும் வைரஸ்கள் தாவர வைரஸ்கள்(Plant viruses) எனப்படுகின்றன. விலங்குவைரஸ்களை (Animal viruses)போன்றேதாவரவைரஸ்களும் புரத உறையினால் (Protein coat) சூழப்பட்ட நியூக்கிளிக் அமிலத்தை (Nucleicacid) கொண்டுள்ளன. ஏனைய வைரஸ்களைப் போன்று தாவர வைரஸ்களும் உயிர்ப்பண்புகளையும் (Living characters) உயிரற்றபண்புகளையும் (Non-living characters)கொண்டுள்ளன.

**வைரஸ்களின் உயிர்ப்பண்புகளாக,**

1.விருந்து வழங்கிகளின் (Hosts) உடற் கலங்களுக்குள் பெருக்கமடைதல்
2.புரதங்கள்,நொதியங்களின் உற்பத்தி
3.நோய்களைஉண்டாக்குதல் மற்றும்
4.விகாரம் (Muta tion)அடைதல்
என்பவற்றைகுறிப்பிடலாம்.

**வைரஸ்களின் உயிரற்ற பண்புகளாக,**

1.கலக்கட்டமைப்பினை(Cellular structure)கொண்டிராமை
2.கலங்களுக்கு வெளியே பெருகும் தன்மை இல்லாது இருத்தல் மற்றும்
3.வளர்ச்சி,சுவாசம் போன்ற அடிப்படை உயிர்ப்பண்புகள் இன்மை

புரத உறை தாவர வைரஸ்களின் நியூக்கிளிக் அமிலத்தை பாதுகாப்பது மட்டுமன்றி அவற்றின் இயக்கம், விருந்துவழங்கிகளைக்கண்டறிதல்,காவிகளுடனான(Vectors) இடைத் தொடர்பாடல் (Interaction) போன்றவற்றில் பங்குகொள்கிறது. கேப்சோமியர்கள் (Capsomeres) புரத உறையின் அடிப்படை அலகுகளாகவிளங்குகிறன. தாவரவைரஸ்களின் நியூக்கிளிக் அமிலம் ஒற்றை இழையாகவோ (Single-stranded) அல்லது இரட்டை இழையாகவோ(Double-stranded) காணப்படுவதுடன், டி.என்.ஏ (DNA)அல்லது ஆர்.என்.ஏ (RNA) இனைக் கொண்டிருக்கும். நியூக்கிளிக் அமிலம் வைரஸ்களின் மரபணுவாக(Genetic material) செயற்படுவதுடன் இனப்பெருக்கம் மற்றும் புரத உற்பத்தி(Protein synthesis)போன்ற தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. நியூக்கிளிக் அமிலத்தின் கட்டமைப்பினை அடிப்படையாகக்கொண்டு பால்ட்டிமோர் வகையீட்டின் (Baltimore classifica tion) பிரகாரம் தாவரவைரஸ்களை ஏழு வகுப்புகளாகப் பாகுபடுத்தலாம். பெரும்பாலான தாவரவைரஸ்கள் ஒற்றை இழை ஆர்.என்.ஏ இனை மரபணுவாகக் கொண்டன.

தாவரவைரஸ்கள் அளவில் மிகவும் நுண்ணிய துகள்கள். இலத்திரன் நுணுக்குக்காட்டியின் (Electron microscope) மூலமே இவற்றைக் காண முடியும். இவற்றின் பரிமாணங்கள் நனோமீட்டர் (Nano meter)எனும் அலகினால் அளக்கப்படுகின்றன. தாவர வைரஸ்கள் திடமானகம்பி(Rigid rods),நெகிழ்வானகம்பி(Flexuous rods),கோளம் (Spherical), உருளைதண்டு(Cylindrical rods) அல்லது நீள (Elongated) வடிவத்தினையும் 15-300 nm அகலமும் 480-2000 nm நீளமும் உடையன.

தாவர வைரஸ்கள் பல்வேறு வகையானநோய்களைத்தாவரங்களில் உண்டாக்குகின்றன. இந்நோய்கள் பெரும்பாலும் தாவரங்களுக்கு மரணத்தை விளைவிக்காவிட்டாலும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களைத்தாக்குவதனால்,அவற்றின் வளர்ச்சி மற்றும் விளைச்சல் பாதிப்படைகின்றன. சில தாவர வைரஸ்கள் குறுகியவிருந்து வழங்கிவரம்பினையும் (Narrow host range) மற்றும் சில பரந்த விருந்து வழங்கி வரம்பினையும் (Broad host range)கொண்டுள்ளன. வைரஸ் தொற்றுக்குள்ளான தாவரங்கள் பொதுவாக ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நோய் அறிகுறிகளை(Disease symptoms) காட்டுகின்றன. நோய் அறிகுறிகளின் தன்மைமற்றும் அவை ஓர் அங்கத்திலிருந்து ஏனைய அங்கங்களுக்கு அல்லது இழையங்களுக்கு பரவும் வேகம் என்பன சுற்றுச்சூழல் காரணிகளால் மாறுபடுகின்றன. பொதுவாக தாவர வைரஸ் நோய் தொற்றின் அறிகுறிகள் எம்மால் காணக்கூடியவையாக(Visible sym ptoms)உள்ளன. எனினும் சிலதாவரவைரஸ்கள் உள்ளுறைவுத் தொற்றுக்களை(Latentinfections) ஏற்படுத்தக்கூடியன. இதன் போதுதாவரங்களில் நோய் அறிகுறிகள் தென்படமாட்டாது. வைரஸ் தாகத்துக்கு உள்ளானதாவரங்களில் வளர்ச்சி குறைதல் (Reduced growth), நரம்பு வெளிறல் (Vein clearing), பன்னிறப் புள்ளியிமைவு(Mottle), இலை மஞ்சளாதல் (Chlorosis),மொசைக் (Mosaic), இழையங்களின் இறப்பு (Necrosis), வளையப்புள்ளிகள் (Ringspots), இலைச் சுருட்டை (Leaf curl), இலைச்சுருள் (Leaf roll) போன்ற நோய் அறிகுறிகள் உண்டா கின்றன.

1.வளர்ச்சிகுறைதல் (Reduced growth) வைரஸ் தொற்றினால் ஒளித்தொகுப்பு (Photosynthesis) குறைவடைதல், தாவர ஹார்மோன்களின் உற்பத்தி மற்றும் அனுசேபத்தில் (Metabolism)ஏற்படும் மாற்றங்களால் தாவரங்களின் வளர்ச்சி குன்றுதல்.

2. நரம்புவெளிறல் (Vein clearing)

இலைநரம்புகள் வெள்ளை அல்லது மஞ்சள் நிறமாகமாறுதல்.

3. பன்னிறப்புள்ளியமைவு (Mottle)

இலைகளில் மஞ்சள் மற்றும் மெல்லியபச்சைநிறபுள்ளிகள் காணப்படுதல்.

4.இலைமஞ்சளாதல் (Chlorosis)

இலைகளில் பச்சையம் (Chlorophyll) அழிவடைவதால் இலைகளின் நிறம் மஞ்சளாகமாறுதல்.

5.மொசைக் (Mosaic)

இலைகள்,பழங்கள் மற்றும் கனிகளில் வெள்ளை,மஞ்சள் மற்றும் மெல்லியபச்சைநிறங்கள் மொசைக் வடிவில் தோன்றுதல்.

6. இழையங்களின் இறப்பு (Necrosis)

கலங்கள் மற்றும் இழையங்களின் இறப்பினால் இலைகளில் பழுப்பு அல்லது கறுப்புநிறபுள்ளிகள் உண்டாகுதல்.

7.வளையப்புள்ளிகள்(Ringspots)

இலைகள்,பழங்கள்,கனிகள் மற்றும் தண்டுகளில் மஞ்சள் அல்லது பச்சை நிறவளையப்புள்ளிகள் காணப்படுதல்.



வளையப்புள்ளிகள்



இலைமஞ்சளாதல்



இலைச்சுருட்டை



நரம்பு வெளிறல்



மொசைக்

தாவரவைரஸ் தொற்றின் நோய் அறிகுறிகள் போன்றே பட்டோ பிளாஸ்மாக்களால் (Phytoplasma) தோற்றுவிக்கப்படும் நோய்த்தொற்றின் அறிகுறிகள், போசணைபற்றாக்குறை (Nutrient deficiencies), களைக்கொல்லிமற்றும் பூச்சிக்கொள்ளிகளால் ஏற்படும் சேதங்களின் அறிகுறிகள் என்பனவும் காணப்படுகின்றன. எனவே வெற்றுக்கண்களுக்குபுலப்படும் நோய் அறிகுறிகளை,மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு குறித்த தாவர வைரஸின் தாக்கத்தினை உறுதிப்படுத்த முடியாது. தாவரவைரஸ் தொற்றினை உறுதிசெய்ய தெளியவியல் பரிசோதனைகள் (Serological tests), பி.சி.ஆர் (PCR) முறைகள் முதலியன உபயோகிக்கப்படுத்தப்படுகின்றன.

தாவரவைரஸ்கள்,நோய்தொற்றுள்ள தாவரத்திலிருந்து ஏனைய நோயற்ற தாவரங்களுக்கு வேகமாக பரவக்கூடியன. தாவர வைரஸ்களின் பரவலினை, செங்குத்துப் பரிமாற்றம் (Vertical transmission)மற்றும் கிடைமட்டப் பரிமாற்றம் (Horizontal transmission)என இரு வகைப்படுத்தலாம்.

செங்குத்து பரிமாற்றத்தின் போது, வைரஸ்கள் நோய்த்தொற்றுள்ள பெற்றோர் தாவரங்களிலிருந்து அடுத்த சந்ததிகளுக்கு பரவுகின்றன. செங்குத்துப் பரிமாற்றம் தாவரப் பதியமுறை இனப்பெருக்கம் (Vegetative propagation)மற்றும் தொற்றுக்குள்ளான விதைகள், மகரந்த மணிகளால் ஏற்படுகின்றது.

கிடைமட்ட பரி மாற்றத்தின் போது தாவர வைரஸ்கள், நோய்த் தொற்றுள்ள தாவரங்களிலிருந்து, அதே பயிர்ச்செய்கை நிலப்பரப்பு அல்லது அருகிலுள்ள பயிர்ச் செய்கை நிலப்பரப்பிலுள்ள நோயற்ற தாவரங்களுக்குப்பரவுகின்றன. பொது வாகபயிர்களில் ஏற்படும் காயங்கள், ஒட்டுதல், பங்கசுகள், நெமற்றோட்டுக்கள்,பூச்சிகள் முதலியகாரணிகள் கிடைமட்ட பரிமாற்றத்திற்கு வழிசெய்கின்றன.

தாவர வைரஸ் நோய்களின் கட்டுப்பாட்டை பொறுத்தமட்டில், பொதுவான ஆன்டிவைரல் மருந்துகள் (Antiviral drugs) இல்லாமை, வைரஸ்களின் பரவல் வேகம், விகாரத்தின் மூலம் உக்கிரமான திரிபுகளை(Virulent strains) உருவாக்கும் தன்மைமற்றும் வைரஸ் நோய்கள் பற்றிவிவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே போதியளவு புரிந்துணர்வு இல்லாமை போன்றன வைரஸ் நோய் கட்டுப்பாட்டிற்கு பெரும் சவால்களாக அமைகின்றன.

நோய்அறிகுறிகளுள்ள பயிர்களை அகற்றல், நோயுற்ற விதைகள் முதலியவற்றைதவிர்த்தல்,பூச்சிகள் முதலிய காவிகளைப் பயிர்ச்செய்கை நிலப்பரப்பினுள் கட்டுப்படுத்தல், சுத்தமான விவசாய உபகரணங்களை உபயோகித்தல்,களைகளை அகற்றுதல், வைரஸ் எதிர்ப்புள்ள தாவரங்களைப் பயிரிடுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் தாவர வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்த முடியும். தாவர வைரஸினால் பயிர்களில் ஏற்படும் சேதங்களை குறைப்பதன் மூலம் விளைச்சலை அதிகரிக்கவும், தாவர வைரஸ் நோய்த் தொற்றுக்களின் பரவலினை கட்டுக்குள் கொண்டு வரவும், தாவரவைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினை உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதாகும்.

ஆக்கம்:-
த. கதுர்ஜன்
4ம் வருடம்,தாவரவியல் துறை
விஞ்ஞானபீடம்,யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 194





'ஆம், சுவாமி! அந்தக் கொன்னை மரங்களின் மறைவில் மழபாடி கிராமத்துச் சிவன் கோயில் இருக்கிறது!' என்று சீடர்கள் சொன்னார்கள். உடனே சுந்தரமூர்த்தி அங்கே சென்றார். பூத்துக் குலுங்கிய கொன்னை மரங்களின் மறைவில் ஒரு சிறிய கோவில் இருந்தது. சுந்தர மூர்த்தி அங்கே சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டு மன முருகிப் பாடினார்.

அன்றொரு நாள் தன்னைத் தடுத்தாட்கொண்டது போல், இன்றைக்குத் தன்னைக் கூப்பிட்டு அருள்புரிந்த கருணைத் திறனை வியந்தார். 'சுவாமி! தங்களை நான் மறந்து விடுவேனா? என்ன கேள்வி கேட்டீர்கள்? தங்களை மறந்துவிட்டு வேறு யாரை நினைப்பேன்?' என்னும் கருத்து அமைத்து,

பொன்னார் மேனியனே!
புலித் தோலை அரைக்
கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை
அணிந்தவனே
மன்னே மாமணியே
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே உன்னையல்லால்
இனி யாரை
நினைக்கேனே?

என்று பாடினார். தாயே! இன்னும் அந்தக் கோயில் சிறிய கோயிலாகக் கொன்னை மரங்களின் மறைவிலேயே இருக்கின்றது. அதற்குத்தான் உடனே திருப்பணி ஆரம்பிக்க வேண்டும் என்று கோருகிறோம்."

"அப்படியே ஆகட்டும்!" என்றார் செம்பியன் மாதேவி.

ஆழ்வார்க்கடியாரும் அவருடன் இன்னொருவரும் சற்று முன்னால் வந்து நடந்ததையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

## நாற்பத்து நான்காம் அத்தியாயம்
## எல்லாம் அவள் வேலை!

மாமல்லபுரத்து மகா சிற்பிகளின் பரம்பரையில் தோன்றிய சிற்பக் கலைஞர் ஒருவர் இப்போது முன் வந்தார். புதிய முறையில் கருங்கற்றளி அமைப்பதற்கு அவருடைய மனோதர்ம கற்பனைப்படி சிறிய பொம்மைக் கோயில் ஒன்று அவர் செய்து கொண்டு வந்திருந்தார். அதை இப்போது மகாராணியிடம் காட்டினார்.

அதைப் பார்த்து மகாராணி மிகவும் வியந்தார். ஆழ்வார்க்கடியானுக்கு அருகில் நின்றவரைப் பார்த்து, "பட்டரே! இந்த ஆலய அமைப்பு எவ்வளவு சிறப்பாயிருக்கிறது பார்த்தீர்களா? தமிழகத்திலுள்ள முக்கியமான சிவஸ்தலங்களிலெல்லாம் இம்மாதிரி புது முறையில் ஆலயம் எடுப்பிக்க வேண்டும் என்று என்னுடைய உள்ளத்தில் ஆவல் பொங்குகிறது!? என்று சொன்னார்.

"தாயே! தங்கள் விருப்பம் நிறைவேறுவதில் தடை என்ன இருக்கிறது? தேவாரப் பதிகப் பாடல் பெற்ற சிவஸ்தலங்களில் இம்மாதிரி கற்றளிகள் எடுப்பிக்கலாம். இந்த ஆலய அமைப்பைப் பார்த்தவுடனே இது 'பாடல் பெற்ற ஸ்தலம்' என்பதை ஜனங்கள் உணர்ந்து கொள்வார்கள்!" என்று சொன்னார் ஈசான சிவ பட்டர்.

"ஆம், ஆம்! அப்பர் பெருமானும் ஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் பாடிய பதிகங்களையெல்லாம் சேகரிக்க வேண்டும். அவர்களுடைய பாதங்கள் பட்டுப் புனிதமாகி, அவர்களுடைய பாடல்களினால் தெய்வீகமடைந்த ஸ்தலங்களில் எல்லாம் இம்மாதிரி வானளாவிய விமான கோபுரங்களுடன் கற்றளிகளை எடுக்க வேண்டும். இந்த இரண்டுந்தான் என் மனோரதங்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## காகமும் மகாராணியின் நெக்கிளேசும்



ஒரு காட்டில் ஒரு காகம் கூடுகட்டி வாழ்ந்து வந்தது. அக் காகம் விவாகமாகி ஆண்காகமும் பெண்காகமும் அக் கூட்டிலே வாழ்ந்தனர். பல நாட்கள் சென்ற பின் பெண் காகம் 5 முட்டைகள் இட்டது.

அதனைக் கண்ட ஆண்காகம் தான் ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையாக போவதையிட்டு மிக மகிழ்ச்சியடைந்தது. பெண்காகம் முட்டைகளை அடைகாத்து வந்தது.

ஆண் காகம் பெண் காகத்திற்கு வேண்டிய இரையை தேடிக்கொடுத்து பெண்காகம் அடைகாப்பதற்கு உதவி செய்தது, இருவரும் தமக்கு 5 பிள்ளைகள் பிறக்கப் போகிறார்கள் என்று மிகவும் சந்தோசமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தனர்.

அக் காட்டில் ஒரு நரியும் குடும்பமாக வசித்து வந்தது. அந்த நரியும் காகமும் நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் ஆண்காகம் இரைதேடி வரும் வழியில் வேட்டைக்காரர்கள் காட்டினுள் நுழைவதைக் கண்டது. உடனே காகம் நரி நண்பர் வசிக்கும் இடத்திற்கு சென்று வேட்டைக்காரர் காட்டினுள் நுழைவதையும் பாதுகாப்பாக எங்காவது மறைந்து இருக்கும் படியும் கூறியது.

அத்துடன் தனக்கும் ஐந்து பிள்ளைகள் பிறக்க உள்ளார்கள் என்றும் நண்பனான நரிக்கு கூறியது.

அப்போது நரி தங்களுக்கு பாட்டி வைக்கும்படி கேட்டது. காகமும் அன்று இரவு பாட்டி தர அழைக்க வருவதாக கூறியது. உடனே நரியார் குடும்பம் நன்றி கூறி விட்டு ஓடி ஒழித்துக் கொண்டது.

ஆண் காகம் இரையுடன் பெண்காகம் அடைகாத்துக் கொண்டிருந்த கூட்டுக்கு வந்தது. அப்போது பெண்காகம் அழுது கொண்டிருந்தது. காரணம் வினவிய போது. பாம்பொன்று வந்து தனது முட்டைகளைக் குடித்துவிட்டதாக கூறிப் புலம்பியது.

அதனைக் கேட்ட ஆண் காகமும் விம்மி அழுததுடன். அந்தப் பாம்பு தமது பிள்ளைகளை அழித்ததுடன் தமக்கு எனிமேலும் பிள்ளைகள் பிறக்க விட மாட்டாது அதனை கொன்றே தீருவேன் என சபதம் எடுத்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையைச் செய்யத் துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

– சிம்மன்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொருத்தமற்ற தீர்மானம்

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என்பது அந்தந்த மாவட்டங்களில் நிலவுகின்ற பிரச்சினைகளை முன்வைத்து அதற்குத் தீர்வு காணும் பொருட்டான ஏற்பாடாகும்.

எனினும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் அரசியல் பேதமைகள் சன்னதம் ஆட, கூட்டத்தின் நோக்கம் தகர்ந்து போவதுதான் வழமை.

எனவே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை வினைத்திறனுடையதாக ஆக்குங்கள் என்று கேட்டு நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை.

இருந்தும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (31.05.2023) யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையின் மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்காக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலுள்ள கோம்பயன்மணல் மயானத்தில் எரியூட்டியை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்துக்கு அங்கிருந்த மக்கள் பிரதிநிதிகள் தமது ஆதரவைத் தெரிவித்திருந்தாலும் அந்தத் தீர்மானம் மக்களின் நலன் கருதாமல் எழுந்தமானமாக எடுக்கப்பட்ட தீர்மானம் என்பதுதான் உண்மை.

ஆம், யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானம் என்பது ஒரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஓர் இந்து மயானம்.

எனினும் மயானம் என்றவுடன் அங்கு எந்தக் கழிவுகளையும் எரிக்கலாம், புதைக்கலாம் எனச் சிலர் நினைப்பது துரதிர்ஷ்டவசமானது.

பொதுவில் எந்தச் சமயத்தவர்களாயினும் அவர்களின் அந்திமச்சடங்கு இடம்பெறுகின்ற இடம் புனிதமானது.

ஏனெனில் ஒருவர் மரணமடைந்தால், அவர் சார்ந்த சமயப்படி இறுதிக்கிரியைகள் இடம்பெறும்.

குறிப்பாக, இந்து சமயத்தவராக இருப்பின் சிவாச்சாரியர் அபரக்கிரியைகளை மேற்கொண்டு இறந்தவரின் உடலை இறை உச்சாடனம் செய்யப்பட்ட நீரினால் அபிசேகப்படுத்தி, சூர்னோற்சவம் செய்து இறந்தவரின் உடல் பரம்பொருளிடம் சென்றேகும்படி அக்கினியில் இடப்படும்.

அதேபோன்று கத்தோலிக்க மக்கள் இறந்தவரின் உடலை தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, இறந்தவர் மீண்டும் உயிர்த்தெழுவார் என்ற நம்பிக்கையோடு இடுகாட்டில் புதைக்கப்படுவார். ஆக, மயானம் என்பது புனிதமானது.

அதேநேரம் மனித அபயங்கள், கருச்சிதைவுகள், பிரேத பரிசோதனையின் போதான எச்சங்கள் என்பன உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளும் உரியவாறு எரியூட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

அவ்வாறான மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு மக்கள் குடியிருப்பு இல்லாத ஒதுக்குப் புறங்களைத் தெரிவு செய்வதுதான் பொருத்தமானது.

இதைவிடுத்து யாழ்.போதனா வைத்திய சாலை மருத்துவக் கழிவுகளை எரியூட்டுவதற்கு யர்ழ்ப்பாணச் சுற்றுவட்டதில் இருக்கக்கூடிய கோம்பயன்மணல் மயானத்தைத் தெரிவு செய்தமையானது, எங்களின் திட்டமிடல்கள் எவ்வாறாக இருக்கின்றன என்பதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

# ஊடகங்களை ஒடுக்கும் நடவடிக்கையை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி வலியுறுத்து

ஊடகங்கள்ள ஒடுக்குவதற்காக அரசாங்கம் எடுக்கவுள்ள சில முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், "அரசாங்கம் தற்போது ஒலிபரப்புத் தொடர்பான சட்டமூலம் ஒன்றினைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றது.

குறித்த அரசாங்கத்தின் முயற்சியில் குறித்த ஆணைக்குழுவினைச் சேர்ந்த உறுப்பினர்கள் எந்த வேளையும் ஒரு ஊடக நிறுவனத்திற்குள் சென்று விசாரணைகளை நடத்தலாம்.

இந்த விடயம் ஊடக சுதந்திரத்தினை வெகுவாகப் பாதிக்கும் என்பதே எமது குற்றச்சாட்டு.

அரசாங்கம் ஏன் தற்போது அவசர அவசரமாக இந்த ஒலிபரப்புத் தொடர்பான சட்டமூலத்தினைக் கொண்டு வருகின்றது என்ற கேள்வி எம் மத்தியில் எழுகின்றது.

அரசாங்கம் முன்னர் கொண்டு வருவதற்கு எத்தனித்த புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் என்பவற்றினை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்களை அரசாங்கம் சந்தித்துள்ளது.

இதற்கு ஊடகங்களும் ஒரு காரணமாக இருந்துள்ளன. எனவே முதலில் ஊடகங்களை அடக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் தற்போது இந்த சட்டமூலத்தினைக் கொண்டு வருவதற்கு எத்தனிக்கின்றது.

இது தவறான விடயமாகும். இதற்கு எதிர்க்கட்சி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணிசார்பில் நாம் எமது எதிர்ப்பினை வெளியிடுகின்றோம்.

எனவே தற்போது ஊடகங்களை முதலில் அடக்கிவிட்டு பின்னர் தமக்கு ஏற்ற விதத்தில் சட்ட மூலங்களைக் கொண்டு வரலாம் என அரசாங்கம் நினைக்கின்றது. அவ்வாறு செய்யக்கூடாது. இது தவறான விடயமாகும் என்றார். (ம-7)

# ஆட்டோ கட்டணத்தை குறைக்கப் போவதில்லை

## முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம்

(கொழும்பு)

பெற்றோல் விலை குறைக்கப்பட்ட போதிலும் கட்டணத்தை குறைப்பதில்லை என முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த பெற்றோல் விலை திருத்தத்தின் மூலம் தமக்கு போதிய நிவாரணம் கிடைக்கவில்லை என அகில இலங்கை முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை அதிகரித்தால் முச்சக்கர வண்டி கட்டணத்தை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்படும் என தொழிற்சங்கங்கள் முன்னர் அறிவித்திருந்தன.

திருத்தப்பட்ட எரிபொருள் விலை அமுலுக்கு வருகிற போதும், கட்டண மீளாய்வுக் குழுவை நியமிக்குமாறு லலித் தர்மசேகர அரசாங்கத்திடம் கோரியுள்ளார். (ம-7)

# சீனாவுக்கான ஏற்றுமதிகளினை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான 12ஆவது சுற்று இராஜதந்திர ஆலோசனைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன.

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் சீன வெளிவிவகார பிரதி அமைச்சர் சன் வெய்டாங் ஆகியோரின் தலைமையில் இந்த ஆலோசனைகள் இடம்பெற்றன.

இருதரப்பு ஒத்துழைப்பு, பொருளாதாரம், வர்த்தக ஒத்துழைப்பு, தற்போதைய பொருளாதார மீட்பு செயல்முறை, வாழ்வாதார உதவி, நிதியுதவி, மக்களிடையே பரிமாற்றம் மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான பலதரப்பு ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு தசாப்தங்களில் சீனாவின் புதிய அபிவிருத்தி முன்னுதாரணத்திற்கும், நவீனமயமாக்கலுக்கும் சீனாவின் [illegible] களை வறுமையில் இருந்து வெற்றிகரமாக உயர்த்தியதற்கும் இட்டுச் செல்லும் சீனாவின் உயர்மட்ட அபிவிருத்திகள் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்ததாக சீனாவின் துணை அமைச்சர் சன் வெய்டாங் தெரிவித்தார்.

சவாலான காலகட்டத்தில் இலங்கைக்கு சீனா வழங்கிய உதவிகளை வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன பாராட்டியதுடன், சீனாவுக்கான இலங்கையின் ஏற்றுமதியை குறிப்பாக இலங்கை கறுவா, கடல் உணவு, பழங்கள், காய்கறிகள் மற்றும் இரத்தினக் கற்கள் ஏற்றுமதியை விரிவுபடுத்துவதற்கு சீனாவின் ஆதரவை கோரியிருந்தார்.

மேலும் அவர் இலங்கையின் பொருளாதார மீட்சியை விளக்கியதுடன் சீன சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதை வரவேற்றார்.

இரு நாட்டு மக்களின் பரஸ்பர நன்மைக்காக இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இலங்கையும் சீனாவும் இந்த ஆலோசனைகளின் [illegible] உறுதியளித்தன. (ம-7)

# 23 வயதான இளைஞன் வெட்டிப் படுகொலை

கொழும்பு - பாணந்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஒருவர் கொடூரமான முறையில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறையில் உள்ள ஆடைத்தொழிற்சாலைக்கு முன்பாக குறித்த இளைஞன் வாளால் தாக்கப்பட்டதுடன் தாக்குதலுக்குள்ளான இளைஞன் காயங்களுடன் ஆடைத் தொழிற்சாலை வளாகத்திற்கு ஓடியுள்ளார்.

அவரைப் பின்தொடர்ந்து வந்த கொலையாளி இளைஞனை வாளால் தாக்கிய விதம் அங்கிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளது.

இளைஞன் தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டமையினால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மொதரவில அடுக்கு மாடி குடியிருப்பில் வசிக்கும் 23 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கொலையைச் செய்த சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஜூலை மாத இறுதிக்குள் பணவீக்கம் வீழ்ச்சியுறும்

## மத்திய வங்கி

நாட்டின் தற்போதைய நிதி நிலைமை தொடர்பில் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க நேற்று தெளிவுபடுத்தினார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இருந்து நிதிக் கொள்கையை உறுதியாக பேண வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட மத்திய வங்கி ஆளுநர், பண வீக்கம் மேலும் அதிகரிக்கும் அபாயம் இருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

எனினும், கடுமையான நிதிக் கொள்கை காரணமாக, செப்டம்பர் மாதம் 70% பணவீக்க அதிகரிப்பை தடுக்க முடிந்ததாகவும் தற்போது மிகவும் வேகமாக பணவீக்கம் குறைவடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பணவீக்கம் குறைந்ததால், அதிகரித்த வட்டி வீதத்தை ஓரளவு குறைக்க நடவடிக்கை எடுத்ததாகவும் ஜனவரி மாதம் திறைசேரி முறிகளின் மூன்று மாத வட்டி வீதம் 33 வீதமாகக் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், பணவீக்கம் மிக வேகமாகக் குறைந்து ஜூலை மாத இறுதியில் ஒற்றை இலக்கத்திற்கு வரும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

22

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**5. நாம் வரலாறு படைக்கலாம்**

2015 இல் உலகிலேயே இழுவைப் படகு மீன்பிடித்தலிலிருந்து அதன் அனைத்து கடல் திட்டுகளையும் நிரந்தரமாகப் பாதுகாத்த முதலாவது நாடாக சிலி மாறியது. இந்தோனேசியா, நியூசிலாந்து, பெலிஸ் மற்றும் ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இழுவைப்படகு மீன்பிடித்தல் மீது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான தடையை விதித்துள்ளன. அதேபோன்று தமிழ்நாடு மற்றும் கேரளா உள்ளிட்ட இந்திய மாநிலங்கள் இந்நடைமுறையின் தீங்கிழைக்கும் தாக்கத்தை குறைப்பதற்காக வருடாந்த மீன்பிடித்தடைகளை விதிக்கின்றன. இழுவைப் படகு மீன்பிடி நடவடிக்கைகளைத் தடை செய்யும் சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டால், ஆசியாவிலேயே இந்நடைமுறையை முழுமையாக தடை செய்த முதலாவது நாடாக இலங்கை விளங்கும். இந்தத் தடை சூழல் பாதுகாப்பில் இலங்கை ஓர் உலக நாயகனாக உருவெடுப்பதற்கு பங்களிப்புச் செய்வதோடு, பேணத்தக்க மீன்பிடித்தலுக்கான இலங்கையின் கடப்பாட்டையும் உறுதிப்படுத்தும்.

இக்காரணங்களுக்காக இயந்திர இழுவைப்படகு மீன்பிடி நடவடிக்கைகளைத் தடைசெய்யும் உத்தேச சட்டமூலத்தை பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டும். இதனால் எமது சூழல், எமது பொருளாதாரம், எமது உள்ளூர் மீனவர்கள், எமது வெளிநாட்டுறவு மற்றும் வரலாற்றில் எமது இடம் ஆகியன நன்மையடையும்.

**இச்சட்டமூலம் பற்றி குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்த கருத்து.**

தனிநபர் பிரேரணையாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கொண்டு வரப்பட்ட இழுவைப் படகுகள் தொடர்பான சட்டமூலத்தில் சில திருத்தங்கள் செய்யப்படவேண்டும்.

இழுவை மடி முறை மூலம் மீன்பிடித் தொழில் செய்யும் மீனவ குடும்பங்கள் தொடர்பில் பிழையான செய்திகள் பரவிக் கொண்டுள்ளது. ஆகவே சரியான தகவல்களை அனைத்து மக்களுக்கும் வெளிப்படுத்த வேண்டும்.

இழுவை மடி தொழிலை 1976 ஆம் ஆண்டு நாங்கள் அனைவரும் ஆரம்பித்தோம். இதற்கு முன்னர் தென்னிந்திய மீனவர்களின் இழுவை மடி காரணமாக, எமது கடல் வளத்தை இழக்க நேரிட்டது. அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.க அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சர் தான் இந்தத் தொழில் முறையை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இதனால் இந்திய மீனவர்கள் அள்ளிச் செல்லும் ஒரு பகுதி கடல் வளத்தை எம்மாலும் பெற்றுக் கொள்ள முடிந்தது.

யுத்தம் நிறைவடைந்த காலப் பகுதியில், இந்திய மீனவர்கள் மீண்டும் எமது கடற்பரப்பில் இழுவை மடி மூலம் தொழில் செய்தனர். யுத்தம் உக்கிரமடைந்த போது 300 வரையான இழுவை மடி படகுகள் அழிக்கப்பட்டு எமது வாழ்வாதாரம் கேள்விக்குட்படுத்தப்பட்டது. இதன் பின்னர் மீண்டும் தொழிலுக்கு அனுமதி கிடைத்த பின்னரும் அழிவடைந்த படகுகளுக்கு எந்த நஷ்ட ஈடும் இதுவரை எந்த அரசாங்கத்தாலும் வழங்கப்படவில்லை.

எனினும் தற்போது எமது முயற்சியின் காரணமாக, 325 படகுகளில் தொழில் செய்து வருகின்றோம். இந்த இழுவை மடி படகு மூலம் 1500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் எமது பிரதேசத்தில் மாத்திரம் நேரடி பங்காளர்களாக இருந்து வருகின்ற நிலையில், இந்தச் சட்டமூலம் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால், இந்தக் குடும்பங்களின் நிலை என்ன? வீதியிலா நிற்பது? எங்களால் மேற்கொள்ளப்படும் இந்த தொழில்முறை மூலமாக எந்த அழிவும் நடைபெறவில்லை.

குறிப்பாக இத்தொழிலால் கடற்பாறை, பவளப்பாறைகள் அழிவடைந்து விடும் எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. எனினும் இவ்வாறான இடங்களில் இழுவை மடி செய்ய முடியாது. இறால் வகை, கடலில் உள்ள சேற்று நிலங்களில் தான் வாழ்கின்றன. நாம் தொழிலில் ஈடுபடும் இடங்களில் கடற்பாறை இல்லை. எனவே கடற்பாறை அழிவடையாது. வாரத்தின் மூன்று நாட்க ளில் மட்டுமே இந்த மீன்பிடி முறையை மேற்கொண்டு வருகின்றோம்.

பேசாலை, குருநகர் மக்களும் தான் இழுவை மடித் தொழிலை அதிகளவில் மேற்கொள்ளுகின்றனர். இந்த மீனவர்கள் சேற்றுப் பாங்கான கடல்களில் தான் தொழில் செய்கின்றனர். எமது பிரதான கடல் மையம் நெடுந்தீவிலிருந்து கச்சதீவை நோக்கியதாகும். எம்மால் பாதிப்பு ஏற்படுவதாக நெடுந்தீவு மீனவர்கள் முறையிட்டதையடுத்து, நெடுந்தீவிலிருந்து ஐந்து கடல் மைல்களுக்கு அப்பால் தொழில் செய்வது என இணக்கம் காணப்பட்டது. இவற்றை மீறுபவர்களுக்கு எந்தத் தண்டனை வேண்டுமானாலும் கொடுக்கலாம் அதனை ஏற்றுக் கொள்ள நாங்கள் தயாராகவே உள்ளோம்.

இந்தத் தொழில் மூலம் அறுவடை செய்யும் இறால் வகைகள் பாரியதொரு வளமாக உள்ளது. இந்த அந்நியச் செலாவணியை கைவிடப் போகின்றோமா? ஆகவே, இறால்கள் பிடிப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்தால் கைவிட தயாராக உள்ளோம். 1974 ஆம் ஆண்டிலிருந்து இறால் அறுவடை அதிகரித்து கொண்டுள்ளதே தவிர குறைவடையவில்லை. 6 மாத காலம் மட்டுமே உயிர்வாழக்கூடிய இந்த இறாலை அழிய விடப் போகின்றோமா?

28 அடி நீளமான படகுகளைச் செய்யும் தொழிலில் ஈடுபட்டோம். தற்போதும் மனித வலுவை பயன்படுத்தி பாரம்பரிய முறையில் தான் இன்றும் இழுவை மடி தொழிலை செய்து வருகின்றோம். ஆனால் தென்னிலங்கை மீனவர்கள் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர்.

இதே போன்று 7 ஆயிரம் விசைப் படகுகளை தமிழ் நாட்டு மீனவர்கள் வைத்துள்ளார்கள். இவர்கள் பிடித்த மிச்சத்தை தான் நாங்கள் பிடிக்கின்றோம். எமது கடல் வளத்தை பாதுகாக்க, தமிழ் நாட்டு மீனவர்,, தென்னிலங்கை மீனவர்களை இந்தச் சட்டமூலம் கொண்டு எங்கள் கடற்பரப்பில் இழுவை மடி செய்வதை தடைசெய்வது வரவேற்கத்தக்கது. எமது கடற்பரப்பை வேறு யாரும் பயன்படுத்த முடியாது.

இந்தச் சட்டமூலம் தொடர்பாக, நடைபெற்ற கலந்துரையாடலில், குறித்த சட்டமூலத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனக் கூறினார்கள். இதன்போது உள்ளூர் மீனவர்களுக்காக சில திருத்தங்களை மேற்கொள்வதாக உறுதியளிக்கப்பட்டது. ஆகவே எங்களுக்கு கூறப்பட்ட விடயங்கள் அந்த சட்ட மூலத்தில் உள்வாங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

**இழுவைப் படகுகள் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. சிவாஜிலிங்கத்தின் கருத்து**

அடி முறையை தடை செய்யுங்கள் இழுவை மடி மீன்பிடி முறையை விஞ்ஞான முறைப்படி அனுமதியுங்களென தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில், இந்திய- இலங்கை இடையிலான கடல் எல்லையில் நடைபெறுகின்ற பிரச்சினைகள் ஆண்டாண்டு காலமாக இந்தப் பகுதியில் இருந்த போதிலும் இழுவைப் படகுகள் வந்ததன் பின்பு பிரச்சினைகள் ஆரம்பித்தது.

இழுவைப் படகுகள் தொடர்பில் கண்மூடித்தனமான சிந்தனைகள் எம்மத்தியில் காணப்படுகின்றன. உலகில் இரண்டு நாடுகள் மட்டுமே இழுவைப் படகை தடை செய்துள்ளன.

அடி மடி என்பதுதான் தவறானது. அது கடலின் அடி வரையுள்ள வளங்களை சுரண்டுவதன் மூலம் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. மீன்வளம் முழுவதுமாக அழிக்கப்படுகின்றது. ஆழம் குறைந்த பகுதிக்கு வரும் போதே இந்தப் பிரச்சினை உருவாகிறது. அடி முறையை தடை செய்யுங்கள். இழுவை மடி முறையை தடை செய்ய வேண்டாமென நான் மாகாண சபையிலும் தெளிவாக கூறியிருந்தேன்.

சிலர் நினைத்தார்கள் நான் ஒரு சிலருக்காக ஆதரவாக இருக்கின்றேன் என்று. நல்லாட்சி அரசின் காலப் பகுதியில் ஏன் இந்த இழுவை மடி முறையை தடை செய்யவில்லை.

இந்திய -இலங்கை அரசுகள் எல்லை தாண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடலோரக் காவல் படை, கடற்படை என்பன நவீன முறைகள் கொண்டிருந்தும் கூட இருநாட்டு மீனவர்களும் எல்லை தாண்டுவதை தடுக்க முடியவில்லை.

இரு நாட்டு மீனவர்களுக்கும் முரண்பாடுகள் ஏற்படுகின்றது. இதனை தவிர்க்க வேண்டும்.இரு நாட்டு அரசுகளும் பேசி இதற்கு முடிவு கட்ட வேண்டும். இரண்டு பகுதியிலும் உயிர்ச் சேதங்கள் வரக்கூடாது.

மீனவர்கள் தவறு செய்தால் அவர்களை கைது செய்யுங்கள். அவர்களை அடிப்பதோ, துன்புறுத்துவதோ உங்களுடைய பணி அல்ல. தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதி கடலில் தொழில் செய்கின்றார்கள். இதனை அனுமதிக்க முடியாது.

எங்கள் நாட்டு மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்குரியது. அதை போல இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது இந்திய அரசின் பொறுப்பு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## போதுமான...

பாடு குறித்து பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என்று அமைச்சர் கஞ்சன விஜேசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.

எரிபொருள் விலைக் குறைப்பை எதிர்பார்த்து எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் முன்பதிவு வழங்காததால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விநியோகஸ்தர்கள் குறைந்தபட்சம் 50 சதவீத இருப்பை வைத்திருக்க வேண்டும். குறைந்தபட்ச கையிருப்புகளை பராமரிக்காத எரிபொருள் நிலையங்களின் உரிமத்தை மறுபரிசீலனை செய்து இடைநிறுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் கேட்டுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## எரிபொருள்...

நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என பதாகை காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

இந்நிலையில் வவுனியாவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலினை பெற்றுக்கொள்ள மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் வரிசையில் காத்து நிற்கின்றதனை அவதானிக்க கூடியதாக இருக்கிறது.(ம-7)

## மீண்டும் வரிசை...

நிலை உருவாகியுள்ளது.

எரிபொருளின் விலை புதன்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டு புதிய விலைகள் அறிவிக்கப்பட்ட போதிலும், யாழ்.மாவட்டத்தில் பல பகுதிகளில் பெற்றோல் தட்டுப்பாடு நிலவுவதுடன், மக்கள் மீண்டும் வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு என்ற தகவல் பரவ ஆரம்பித்துள்ள நிலையில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

## குடும்பஸ்தர்...

குளம் பகுதியில் வசித்து வந்த பாலசிங்கம் சுரேஸ் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இரவு உணவருந்திவிட்டு நித்திரைக்குச் சென்ற குறித்த குடும்பஸ்தர் தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கி மரணமடைந்துள்ளார். (ம-7,299)

## ஆறு அத்தியா...

கிலோ வெள்ளைச் சீனியின் விலை 10 ரூபாய் குறைக்கப்பட்டு 229 ரூபாயாகவும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 11 ரூபாய் குறைக்கப்பட்டு 114 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது.

மேலும், ஒரு கிலோகிராம் சிவப்பு பருப்பின் விலை 11 ரூபாய் குறைக்கப்பட்டு 314 ரூபாயாகவும் ஒரு கிலோ மாவின் விலை 15 ரூபாய் குறைக்கப்பட்டு 210 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

லங்கா சதொச ஒரு கிலோ வெள்ளை நாட்டு அரிசியின் விலை 4 ரூபாயால் குறைத்து 175 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

## விருந்துபசாரத்...

முச்சக்கரவண்டி சாரதி ஒருவரின் வீட்டில் புதுமனை புகுவிழா இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு முடிந்ததும் இரவு இடம்பெற்ற விருந்துபசாரத்தின்போது அங்கு சிலருக்கு இடையில் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

இதன் பின் அவரவர் தமது வீடுகளுக்கு சென்றுள்ளனர். மறுநாள் 29ஆம் திகதி காலை 7 மணியளவில் வவுனியா இலங்கை வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் புகையிரத கடவையில் சடலம் ஒன்று காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சடலம் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் மீட்கப்பட்டதுடன், முச்சக்கரவண்டி ஒன்றில் இரத்தக்கறை காணப்படுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

தொடர்ந்து முதலாம் எதிரியான வவுனியா - தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முச்சக்கரண்டி சாரதி கைது செய்யப்பட்டதுடன், இரண்டாம் சந்தேகநபரான பிறிதொரு முச்சக்கர வண்டி சாரதி சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார்.

வழக்கு விசாரணைகள் நடைபெற்று தடுப்புக்காவலில் இருந்து இருவரும் விடுவிக்கப்பட்டு, கடந்த 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆம் திகதி குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் முதலாம் மற்றும் இரண்டாம் எதிரிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் அரச சட்டவாதியான தர்சிகா திருக்குமரநாதனின் நெறிப்படுத்தலில் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்தபோது முச்சக்கர வண்டியில் பெறப்பட்ட இரத்த மாதிரியும், கொலை செய்யப்பட்ட நபரின் இரத்த மாதிரியும் ஒத்துபோவதை தடயவியல் பொலிஸார் மன்றில் சாட்சியத்தின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன், வெளிக்காயம் மற்றும் உட்காயம் ஏற்பட்டு குறித்த மரணம் ஏற்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரி மன்றில் சாட்சியமளித்துள்ளார்.

சந்தர்ப்பம், சூழ்நிலை, சாட்சியம் மூலம் முதலாம் எதிரியான பொதுக்கிணறு வீதி தோணிக்கலைச் சேர்ந்த யேசுதாசன் இலங்கேஸ்வரன் தான் குறித்த கொலையை செய்துள்ளார் என்பது அரச சட்டவாதியால் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால், முதலாம் எதிரிக்கு மரண தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்ததுடன், இரண்டாம் எதிரியான சந்தேகநபரை விடுவித்து தீர்ப்பு வழங்கினார். (ம-7)

## 111...

தில் அரசு சிறப்பு கவனம் செலுத்தி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளது.

மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு போதிய நிதி உள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள ரம்புக்வெல, கடந்த ஆண்டைவிட பொருளாதார நிலை வலுவடைந்துள்ளதாக தெரிவித்தார்.

எனினும்நிதிய விடுவிப்பதில் பெற்றுக் கொள்வதில் சில சிக்கல்கள் உள்ளதாகவும் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ம-7)

## தையி...

மக்கள் முன்னணியினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (ம-7)

## சிமெ...

சிமெந்து மூடையின் விலை கிட்டத்தட்ட 300 ரூபாய் வரையில் குறைக்கப்படலாம் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# இறுதிக் கிரியைக்கு பணம் இல்லை

## மனைவியின் சடலத்தை வீட்டில் புதைத்த கணவன்

(கொழும்பு)

மதவாச்சி பிரதேசத்தில் மனைவியின் சடலத்தை கணவன் குழி தோண்டி புதைத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இறுதிக் கிரியைகளை மேற்கொள்ள பணம் இல்லாத காரணத்தினால் வீட்டின் பின்புறம் குழி தோண்டி அவர் புதைத்துள்ளார்.

50 வயதுடைய மனைவி உயிரிழந்தமையடுத்து, 39 வயதுடைய கணவன் இரகசியமாக வீட்டின் பின்பகுதியில் குழி வெட்டி புதைத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

39 வயதுடைய ரக்ஷித ருமேஷ் அத்தநாயக்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1587
வெற்றி இலக்கங்கள்
மீனம் 2 0 8 6 4 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1162
U 33 44 52 76
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 3374
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
T 14 44 49 64
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1480
F 02 13 17 39 47

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 441
துலாம் 21 38 59 61 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/01
சீட்டிழுப்பு இலக்கம் 5132
W 9 5 9 9 3 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2106
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.06.01
தினம் வியாழக்கிழமை
S 41 72 75 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,766,960/-
DLB

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி:2023.06.01
வெற்றி வாரம் 4267
வர்ணம்: சிவப்பு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 48,440,907.30
வெற்றி இலக்கங்கள்
05 38 57 72 W
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,523,440.40
திகதி 2023-06-01
வெற்றி வாரம் 3818
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 03 08 18 54
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,176,420/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 03 03 22 50 55
சுப்பர் இலக்கம்
1282
அரஞ்சு நிறம்
2023.06.01
வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 334,511,346.20
DLB DEVELOPMENT LOTTERIES

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 598
திகதி 2023-06-01
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 11 29 62
விதி எண் 08
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 20,325,880.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 548/47
Web: www.dlb.lk

அද කෝටිපති ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 1932
வர்ணம்: இளம் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.50,806,193.80
வெற்றி இலக்கங்கள்
16 28 34 38 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பொருளாதாரத்தில் முன்னேற்றத்தன்மை காணப்படுகிறது.

அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அனுராதபுரம் ஸ்ரீ மகா விகாரை மற்றும் ருவன்வெலிசாய ஆகிய விகாரைகளில் மத வழிபாட்டில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி - அமைச்சு பதவிகள் இல்லாத காரணத்தால் ஆளும் தரப்பின் ஒருதரப்பினர் அதிருப்தியடைந்துள்ளார்கள் ?

பதில் - அவ்வாறு இருப்பார்களாயின் அதுவும் நன்மைக்கே

கேள்வி - உங்களின் ஒத்துழைப்புடன் தான் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார். இணக்கமான தன்மை உள்ளதா ?

பதில் -எமது ஒத்துழைப்புடன் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்,அவ்வளவு தான். கேள்வி - ஊடகங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் ஒலி மற்றும் ஒளிப்பரப்பு அதிகார சபை சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன ?

பதில்- அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படாத வகையில் ஊடகங்கள் பாதுகாக்க செயற்பட வேண்டும்.

கேள்வி - நாட்டின் தற்போதைய நிலைமை எத்தன்மையில் காணப்படுகிறது?

பதில் - நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளதை அவதானிக்க முடிகிறது. பொருளாதாரத்தில் முன்னேற்றத் தன்மை காணப்படுகிறது. அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றார். (ம-7)

# உண்மையான தகவல்களை அச்சமின்றி வெளியிடுங்கள்

## ஊடகவியலாளர்களிடம் எதிர்க் கட்சித் தலைவர்



ஊடகவியலாளர்கள் மக்களுக்கு சரியான உண்மையான தகவல்களை அச்சமின்றி வெளியிடுங்கள் எதிர்க் கட்சியாகிய நாங்கள் உங்களை பாதுகாப்போம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சியின் சர்வ கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டத்தில் ஒலிபரப்பு அதிகாரசபை சட்டம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயக விரோத செயற்பாடுகளை அமுல்படுத்தி ஜனநாயகத்தை அழிக்கும் செயற்திட்டத்தின் மற்றுமொரு திட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளதாகவும், இதன் பிரகாரம் ஒலிபரப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை ஸ்தாபித்து நாட்டின் ஊடகங்களை நசுக்கி ஜனநாயகத்தை சூறையாடும் வகையில் புதிய சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வரவுள்ளதாகவும்,இந்த புதிய சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு, இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட 6 மாதங்களுக்கு மட்டுமே தொலைக்காட்சி நிறுவன உரிமம் செல்லுபடியாகும் எனவும்,அதன் பின்னர், தொலைக்காட்சி அலைவரிசைகள் வருடாந்தம் உரிமம் பெறும் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த உரிமம் வழங்குவதில், சம் பந்தப்பட்ட ஊடக நிறுவனம் அரசுக்கு ஆதரவானதா இல்லையா என்பது குறித்து ஆராயப்படும் எனவும்,இதன் அடிப்ப டையில் உரிமக் கட்டுப்பாடுகளை விதித்து ஊடக அடக்குமுறையின் புதிய அத்தியா யத்தை இந்நாட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும்,இதன் பிரதிபலனாக, இந்த சட்ட வரைவை அரசாங்கம் சமர்ப்பிக்க வுள்ளதாகவும்,இதன் மூலம் ஊடகங்கள் மீதான பாரிய அடக்குமுறை முன்னெடுக்கப்பட்டு ஜனநாயகம் மீறப்படும் எனவும் எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட செய்திகளை மட்டுமே ஒளிபரப்பும் ஊடக அலைவரிசைகளை உருவாக்கும் செயற்பாடுகளே இதன் கீழ் இடம் பெறும் எனவும்,நிறைவேற்று அதிகாரம்,சட்டமன்றம், நீதித்துறைக்கு அடுத்ததாக நான்காவது அரசாங்கமாக கருதப்படும் சுதந்திர சுயாதீன ஊடகங்கள் இதன் கீழ் ஒழுங் குபடுத்தப்படும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் வரைபடத்தை திருத்தியமைத்து நாட்டில் உள்ள 220 இலட்சம் பேரையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தும் சட்டமூலத்தை கொண்டு வர முயற்சி செய்து நாட்டு மக்களின் ஜனநாயகத்தை அப்பட்டமாக மீறிவரும் வேளையில், ஊடக நிறுவனங்களையும் அடக்குமுறைக்குட்படுத்தத் தயார் என்றாலும்,

எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து இந்த செயல்முறையை தோற்கடிப்பதாகவும், நீதிமன்றத்தின் உதவியை நாடி எப்படியாவது இந்தச் செயலைத் தோற்கடிப்பதாகவும், அதற்காக பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் குரல் எழுப்புவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஊடக நிறுவனங்கள் உண்மைத் தன்மை வாய்ந்ததும், துல்லியமான செய்திகளை அறிக்கையிடுமாறும், உங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை எதிர்க்கட்சி ஏற்பதாகவும்,எனவே அச்சமின்றி உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்க ஊடக நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றார்.(ம)


**காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு**

அரியாலை சுப்பிரமணியம் வீதியில் 3/4 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. 5 அடி பாதை மாத்திரமே உண்டு. தேவையானவர்கள் மட்டும் உடன் தொடர்பு கொள்ளவும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (15811)

**076 651 7648**

**தேசிய அபிவிருத்தி லொத்தர் சபைக்கு வேலையாட்கள் தேவை**

யாழ் நகரப் பகுதியிலுள்ள லொத்தர் கூடுகளுக்கு விற்பனையாளர் தேவை. சைக்கிளில் விற்க விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். 40 வயதிற்கு மேற்பட்டோர். (15817)

**077 603 1723**

**ஊர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**

1 1/2 மாத
ஊர் கோழிக் குஞ்சுகள்
500 மொத்தமாக
விற்பனைக்கு.
விலை ஒன்று : 750/= (15822)

**077 332 2433**

**மரவள்ளிக் கிழங்கு மலிவு விலையில் விற்பனை**

1Kg - 170.00
இடம் : அரசகேசரிப் பிள்ளையார் கோவில் அருகாமை நீர்வேலி
Note : முற்பதிவு அவசியம் (15798)

**074 079 6060**

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரில் சிறிய குழந்தை உடைய அரச தொழில் புரியும் குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பொறுப்புக்கள் குறைவாக உள்ள பணிப்பெண் தேவை.
வேலை நேரம் : காலை 6 மணி தொடக்கம் மதியம் 2 மணி வரை (15816)

**077 658 4729**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15820)

**076 733 6047**
**076 755 8606**

**அமெரிக்க லொத்தர் விசா**

V2 TRAVELS

2022ம் ஆண்டு விண்ணப்பித்தவர்களின் பெறுபேறுக்ள் வெளியாகி விட்டன.



அதிஸ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டவர்களின் அடுத்த கட்ட விசா நடவடிக்கைகள் ஆரம்பமாகிவிட்டன. (C-6661)

0768226240 / 0768226241

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-6661)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport உக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 101, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org